


# Let's Talk About Equity in Education in the Time of Covid

LAW & SOCIETY TRUST

## ஜனநாயகக் கலந்துரையாடல், முனைப்பான செவிமடுத்தல் மற்றும் உள்ளடங்கலான பிரசைகள் பங்கேற்பு: பெருந்தொற்றின்போதும் சமூக நெருக்கடியின்போதும் உள்ளடங்கலான குடிமைப் பங்கேற்புக்கான தளங்களை உருவாக்கல்

இலங்கை முகங்கொடுக்கும் பெருந்தொற்றின்போதும் சமூக பொருளாதார நெருக்கடியின்போதும் உள்ளடங்கலான குடிமைப் பங்கேற்புக்கான தளங்களை உருவாக்குவதும் ஜனநாயக நிறுவனங்களையும் சட்டத்தின் ஆட்சியையும் அரச பொறுப்புக்கூறலையும் வலுப்படுத்துவதும் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். ஈடுபாடுமிக்க பிரசைகள் என்ற ரீதியில், நெருக்கடிக்கான அரசாங்கத்தின் பதிற்செயற்பாடுகள் அரசியலமைப்பியலின் கோட்பாடுகளுக்கு இயைபுறுகின்றது என்பதையும் அரசாங்கம் அதிலிருந்து விலகுமிடத்து அவை கட்டுப்படுத்தப்படுவதையும் தவறான தகவல்களும் வெறுப்பினைப் பரப்பலும் தடுக்கப்பட்டு மாற்றத்தை உருவாக்குவோர் மற்றும் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்கள் ஆகியோரின் நேர்மறையான ஈடுபாட்டின் மூலம் சமூக ஒற்றுமை வலுப்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்துவதை நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு, சுகாதார மற்றும் பொருளாதாரச் சவால்களுக்கான அரசாங்கத்தின் துரித பதிற்செயற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்கின்ற கொள்கை விடயங்கள் மீதான பகிரங்கக் கலந்துரையாடலொன்றை மேம்படுத்துகின்ற, அடிப்படை உரிமை மீறல்களை ஆவணப்படுத்துகின்ற ஜனநாயக விழுமியங்களிலும் அரசியலமைப்புக் கோட்பாடுகளிலும் அடிப்படை உரிமைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற உருவாகிவரும் விடயங்கள் பற்றிப் பிரசைகளுக்கு உரிய நேரத்தில் உண்மைகளின் அடிப்படையிலான தகவல்களை வழங்குகின்ற உத்தியோகபூர்வமற்ற ஒரு ''குடிமைக் கண்காணிப்பினைக்'' கருத்திட்டம் உருவாக்கியுள்ளது. ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் வலுப்படுத்துவதற்காக ஆதரித்துவாதாடல் பிரசாரங்களை மேற்கொள்வதையும் அத்துடன் பெருந்தொற்றுக்குப் பின்னரான சூழமைவில் பிரசைகள் தங்களின் தேவைகள், பதகளிப்புக்கள் மற்றும் அபிலாசைகளை வெளிப்படுத்துவதை இயலச் செய்யும் ஒரு தேவைகள் மதிப்பீட்டினை நடத்துவதையும் கருத்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.

இந்த அறிக்கையானது மைக்கல் மெண்டிசினால் எழுதப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தில் அவர்களின் ஈடுபாட்டினை சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (டுளுவு) மெச்சுகின்றது. இக்கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் எல்எஸ்டி சபையினதோ அல்லது முகாமைத்துவத்தினதோ கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை.

**முகப்பு கலை: சங்கீத் மதுரவல**

# கொவிட் காலப்பகுதியில் கல்வியில் ஒப்புரவு பற்றிப் பேசுவோம்

கொவிட்-19 பெருந்தொற்றினால் உலகம் முழுவதிலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட விடயங்களுள் பிள்ளைகளின் கல்வியும் ஒன்றாகும். 2020 மார்ச் மாதத்தின் நடுப்பகுதியில், பெருந்தொற்று உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்தபோது, தெற்காசியப் பிராந்தியத்தில் அநேகமாக சகல நாடுகளிலும் தொற்றுப் பரவ ஆரம்பித்த காரணத்தினால், அந்த நாடுகள் பாடசாலைகளை மூடுவது என்ற தீர்மானத்தினை அறிவித்தன.[1]

இலங்கையிலும் முதலாவது தொற்றாளர் கண்டறியப்பட்ட செய்தி வெளியான உடனேயே தொற்றாளரின் மகனுக்கும் தொற்று ஏற்பட்டுள்ளதாக வதந்தி பரவியது. இச்செய்தியினால் கலவரமடைந்த அச்சிறுவனின் வகுப்பு மாணவர்களின் பெற்றோர்கள் சிறுவனின் பாடசாலையின் முன்பு கூடி பாடசாலையில் இருந்து தங்கள் பிள்ளைகளை அகற்றுமாறு கூப்பாடு போட்டனர்.[2]

குறிப்பிட்ட மாணவனைப் பரிசோதிப்பதற்குச் சுகாதார அதிகாரிகள் துரிதமாக நடவடிக்கை எடுத்து அந்த மாணவனுக்குத் தொற்று ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்தினர். இவ்வாறு உறுதிப்படுத்தியிருந்ததையும் பொருட்படுத்தாது, இவ்விடயம் தொடர்பான கரிசனைகள் பரவலாகத் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து அன்றைய தினமே நாட்டில் உள்ள அரச பாடசாலைகள் *அனைத்தும்* மூடப்படும் எனக் கல்வி அமைச்சு அறிவித்தது.[3] ஏனைய பாடசாலைகளும் இவ்வாறே மூடப்பட்டன.

தீர்மானம் அறிவிக்கப்பட்ட போது, சித்திரை மாத விடுமுறை நேரகாலத்துடன் வழங்கப்பட்டுப் பாடசாலைகள் மீண்டும் அடுத்த மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுவதே உத்தேசமாக இருந்தது. ஆயினும், பின்தொடர்ந்த இரண்டு வருடங்களிலும் அதிகமான மாணவர்கள் வீடுகளிலேயே முடங்கியிருந்தனர். கல்வியினை அணுகுவதற்கான இந்த மாணவர்களின் ஆற்றல் பறிக்கப்பட்டது.

***கொவிட் தொற்றுநிலைமைக்கு முன்னரான கல்வி ஒப்புரவின்மைகள்***

பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் உயர் எழுத்தறிவு வீதம் காணப்படுகின்ற போதிலும் கல்வி முறைமையில் காணப்படும் ஒப்புரவின்மைகள் ஆழமாக வேரூன்றியுள்ளவையாகவும் நீண்ட காலமாக நிலவி வருபவையாகவும் உள்ளன. முன்பிருந்தே நிலவி வரும் ஒப்புரவின்மைகளை ஆராய்வதற்கும் விபரிப்பதற்கும் பல முறைகள் உள்ளன; ஆயினும், இந்த நோக்கத்திற்காக, இந்த ஆவணமானது வருடாந்தப் பாடசாலைத் தொகைமதிப்பீட்டில் இருந்து பெற்ற பிரதான தரவுகளையே முக்கியமாகச் சார்ந்துள்ளது.

2020 ஆம் ஆண்டின் முடிவில் இலங்கையில் 10,155 அரசாங்கப் பாடசாலைகள் காணப்பட்டன.[4] இப்பாடசாலைகள் மூன்று பிரதான வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. **1 ஆம் வகைப்** பாடசாலைகள் உயர்தரம் வரையான வகுப்புக்களைக் கொண்டுள்ளன. **2 ஆம் வகைப்** பாடசாலைகள் சாதாரணதரம் வரையான வகுப்புக்களைக் கொண்டுள்ளன. **3 ஆம் வகைப்** பாடசாலைகள் 5 ஆம் தரம் அல்லது 8 ஆம் தரம் வரையான வகுப்புக்களைக் கொண்டுள்ளன.

---

[1] தெற்காசிய UNICEF பிராந்திய அலுவலகத்தின் 2020 மார்ச், 10–17 இற்கான கொவிட்-19 சூழ்நிலை அறிக்கை இல.2 - World | ReliefWeb (17.3.2020)

[2] மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை இரண்டாக அதிகரித்ததால் அரசாங்கம் கொவிட்-19 தடுப்பு நடவடிக்கைகளை இறுக்கமாக்கியுள்ளது | Daily FT (13.3.2020)

[3] நாளையில் இருந்து ஏப்ரல் 2 வரை பாடசாலைகள் மூடப்படுகின்றன (newsfirst.lk) (12.3.2020)

[4] கல்வி அமைச்சு, 'இலங்கையில் வருடாந்தப் பாடசாலைத் தொகை மதிப்பீடு – 2020', https://moe.gov.lk/wp-content/uploads/2020/08/cenreport.pdf இல் கிடைக்கப்பெறும் (அணுகல் 18.1.2022). இதன் பின்னர், பாடசாலைத் தொகை மதிப்பீடு 2020. இந்த ஆவணம் தயாரிக்கப்படுகையில் 2021 இற்கான புள்ளிவிபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இலங்கையிலுள்ள மொத்த அரசாங்கப் பாடசாலைகளில் சுமார் 72% (7,223) பாடசாலைகள் உயர்தரம் வரையான வகுப்புக்கள் அற்றவையாக உள்ளன (இவை 2 ஆம் அல்லது 3 ஆம் வகையினைச் சேர்ந்தவையாகும்). உயர்தரம் வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளில் (2,932), 1000 பாடசாலைகள் மட்டுமே விஞ்ஞானப் பிரிவுக்கான வகுப்புக்களைக் கொண்டுள்ளன (அதாவது, உயிரியல் மற்றும்/அல்லது பௌதிக விஞ்ஞானம்).

இலங்கையில், 2020 ஆம் ஆண்டின்போது பெரும்பான்மையான பாடசாலைகள் 3 ஆம் வகைப் பாடசாலைகளாக இருந்தன. இவற்றின் எண்ணிக்கை 3,999 ஆகக் காணப்பட்டது. இந்த வகையினுள், 1 ஆம் தரம் முதல் 5 ஆம் தரம் வரையான வகுப்புக்களைக் கொண்ட 3,884 பாடசாலைகள் காணப்பட்டன. 1 ஆம் தரம் முதல் 8 ஆம் தரம் வரையான வகுப்புக்களைக் கொண்ட 115 பாடசாலைகள் காணப்பட்டன.

உத்தியோகபூர்வப் புள்ளிவிபரங்களுக்கு அமைவாக, 2020 ஆம் ஆண்டில் 319,405 மாணவர்கள் 1 ஆம் தரத்தில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் 40% ஆனோர், அதாவது, 130,009 மாணவர்கள், 3 ஆம் வகைப் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். முன்னைய இரண்டு வருடங்களிலும் கூட (அதாவது, 2018 மற்றும் 2019) 1 ஆம் தரத்தில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் 40% ஆனோர் 3 ஆம் வகைப் பாடசாலைக்குச் சென்றனர். ஒவ்வொரு வருடமும் 1 ஆம் தரத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களில் 40% ஆனோர் தங்களின் கல்வியினை நிறைவு செய்வதற்கான எஞ்சிய 5 அல்லது 8 வருடங்களுக்காக வேறு ஒரு பாடசாலைக்குச் செல்லவேண்டியுள்ளது என்பதையே இது குறிக்கின்றது.

ஆயினும், இலங்கையிலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் 3 ஆம் வகைப் பாடசாலைகளாக இருந்தபோதிலும், மாணவர்களில் பெரும்பான்மையானவர்களை அப்பாடசாலைகளால் சேர்த்துக் கொள்ள முடிவதில்லை. மாணவர்களில் 17% ஆனோர் மாத்திரமே 2020 ஆம் ஆண்டில் 3 ஆம் வகைப் பாடசாலைகளுக்குச் சென்றிருக்கின்றனர். இதற்கான காரணம் இலங்கையிலுள்ள பாடசாலைகளில் பெரும்பான்மையானவை 3 ஆம் வகையானவையாக இருந்தபோதிலும் மாணவர்களை உள்வாங்குவதற்கான அவற்றின் இயலளவு குறைவானதாகவே இருக்கின்றது. நாடு முழுவதிலும் பரவியுள்ள இப்பாடசாலைகள் பொதுவாகப் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்களை உள்வாங்குவதில்லை. 3 ஆம் வகைப் பாடசாலைகளில் பெரும்பான்மையானவை (அதாவது, 3,999 இல் 1,317) 2020 ஆம் ஆண்டில் 50 இற்கும் குறைவான மாணவர்களையே உள்வாங்கியுள்ளன. 3 ஆம் வகைப் பாடசாலைகள் அனைத்திலும் 46 பாடசாலைகள் மாத்திரமே 1000 இற்கும் மேற்பட்ட மாணவர்களை உள்வாங்கியுள்ளன.

மறுபுறத்தில், 9% பாடசாலைகள் (அதாவது, 930 பாடசாலைகள்) ஒரே நேரத்தில் 1000 இற்கும் மேற்பட்ட மாணவர்களைச் சேர்த்துள்ளன. இப்பாடசாலைகளில் சில ஒரே நேரத்தில் 4000 இற்கும் மேற்பட்ட மாணவர்களைச் சேர்க்கும் இயலளவினைக் கொண்டுள்ளன. நம்பமுடியாத விதத்தில், 2020 ஆம் ஆண்டில் மொத்த மாணவர் தொகையில் 43.2% ஆனோர் இப்பாடசாலைகளில் ஒன்றுக்குச் சென்றுள்ளனர். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், மொத்த மாணவர் தொகையில் கிட்டத்தட்ட அரைவாசியினர் மிகவும் சொற்பமாகக் காணப்படும் மிகப் பெரிய பாடசாலைகளில் செறிந்துள்ள அதேவேளை, மாணவர் தொகையில் ஏனையோர் பெரும் எண்ணிக்கையில் காணப்படும் மிகச் சிறிய பாடசாலைகளில் பரந்து காணப்பட்டனர்.

இலங்கை அரசாங்கப் பாடசாலைகளில் காணப்படும் மற்றொரு முக்கியமான வகைப்படுத்தல் தேசிய /மாகாண வித்தியாசமாகும். தேசியப் பாடசாலைகள் கல்வி அமைச்சினால் நேரடியாக நிர்வகிக்கப்படுகின்றன (இதனால் இவை அதிக வளங்களுக்கான நேரடியான அணுகலைக் கொண்டுள்ளன). ஏனைய அனைத்துப் பாடசாலைகளும் 'மாகாணப் பாடசாலைகள்' எனக் குறிப்பிடப்பட்டு மாகாண நிர்வாகத்தினால் நிர்வகிக்கப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் இருந்த 10,155 அரசாங்கப் பாடசாலைகளில், 373 பாடசாலைகள் "தேசிய" பாடசாலைகள் என வகைப்படுத்தப்பட்டிருந்தன. இவற்றுள் 372 பாடசாலைகள் 1 ஆம் வகைப் பாடசாலைகளாகும் (அதாவது, உயர்தரம் வரையான வகுப்புக்களைக் கொண்டவை); 1 பாடசாலை 2 ஆம் வகைப் பாடசாலையாகும் (அதாவது, சாதாரண தரம் வரை வகுப்புக்களைக் கொண்டது). 2020 ஆம் ஆண்டில் 3 ஆம் வகைத் தேசிய பாடசாலைகள் காணப்படவில்லை. மேலே குறிப்பிட்டவாறு, ஒரே நேரத்தில் 1000 இற்கும் மேற்பட்ட மாணவர்களை உள்வாங்கும் ஆற்றலைக் கொண்ட பாடசாலைகள் சகல பாடசாலைகளிலும் 9% ஆக மாத்திரம் இருக்கும் அதேவேளை, அநேகமாக அனைத்துத் தேசிய

பாடசாலைகளும் அவ்வாறான இயலளவினைக் கொண்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் 1 ஆம் தரத்திற்கான மொத்த அனுமதிகளில், 8% மாத்திரமே தேசிய பாடசாலைகளுக்கான அனுமதிகளாகும்.

வருடாந்தப் பாடசாலைத் தொகை மதிப்பீட்டில் கண்டறியப்பட்ட மற்றொரு முக்கியமான குறிகாட்டி அனைத்துப் பாடசாலைகளிலும் ஆசிரியர்களின் பரம்பலாகும். இங்கே, அனைத்துத் தேசிய பாடசாலைகளிலும் 95% ஆனவை 50 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களைக் கொண்டுள்ள அதேவேளை, அனைத்து மாகாணப் பாடசாலைகளிலும் 93% ஆனவை, 50 இற்கும் குறைவான ஆசிரியர்களையே கொண்டுள்ளன. மொத்தத்தில், அனைத்து அரசாங்கப் பாடசாலைகளிலும் 89% ஆனவை 50 இற்கும் குறைவான ஆசிரியர்களையே கொண்டுள்ளன.

ஆசிரியர்கள் தொடர்பாக ஐந்து பிரதான வகை நியமனங்கள் காணப்படுகின்றன. அவை பின்வருவனவாகும்[5]:

- *பட்டதாரி ஆசிரியர்கள்* - அடிப்படைப் பட்டம், பட்டப் பின் டிப்ளோமா, பட்டப் பின் பட்டம் பெற்றுள்ளோர்
- *பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்* - பயிற்சிக் கல்லூரியில் இருந்து ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழைப் பெற்ற ஆசிரியர்கள் / தேசிய கல்விக் கல்லூரியில் இருந்து தேசிய டிப்ளோமா பெற்றவர்கள் / விஞ்ஞானம் / கணிதத்தில் 2 வருட டிப்ளோமா பெற்றுள்ள ஆசிரியர்கள்
- *பயிற்றப்படாத ஆசிரியர்கள்* - பயிற்றப்படாத ஆசிரியர்கள் மற்றும் ஏனைய 2 – 3 வருட டிப்ளோமா பெற்றவர்கள் மற்றும் இலங்கை ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்பட்டவர்கள்
- *பயிலுனர் ஆசிரியர்கள்* - இலங்கை ஆசிரியர் சேவையினுள் உள்வாங்கப்படாதவர்கள்
- *ஏனைய ஆசிரியர்கள்* - ஏனைய அரசாங்க நிறுவனங்களினால் கொடுப்பனவு செலுத்தப்படும் ஆசிரியர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் / அமைப்புக்களினால் கொடுப்பனவு செலுத்தப்படும் ஆசிரியர்கள்

பொதுவாக, இந்த வகைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒழுங்கு வரிசையானது, ஒரு வகையினை மற்றைய வகையுடன் தொடர்புபடுத்தி அந்தந்த வகைகளின் முக்கியத்துவம் மற்றும் சம்பள மட்டம் ஆகியவற்றினைப் பிரதிபலிக்கின்றது.

2020 ஆம் ஆண்டில் மொத்தமாக 249,494 ஆசிரியர்கள் இலங்கையில் அரசாங்கப் பாடசாலைகளில் கற்பித்தனர். இவர்களுள், 48.7% ஆனோர் பட்டதாரி ஆசிரியர்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தனர். மொத்தப் பட்டதாரி ஆசிரியர்களில், 66% ஆனோர் 1 ஆம் வகைப் பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்டனர் (உயர்தரம் வரை வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள்). அதேவேளை, பட்டதாரி ஆசிரியர்களில் 10% ஆனோர் மாத்திரமே 3 ஆம் வகைப் பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்டனர் (1-5 அல்லது 1-8 வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள்).

மாணவருக்கும் - ஆசிரியருக்கும் இடையிலான விகிதாசாரம் கல்விச் சூழமைவில் ஒரு முக்கியமான குறிகாட்டியாகும். இது மாணவர்களின் எண்ணிக்கையுடன் கல்வி கற்பிப்பதற்காக உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையினை ஒப்பிடுகின்றது. பொதுவாக ஆகக் குறைவான விகிதாசாரத்தின் அர்த்தம் ஆசிரியர் ஒருவர் அவரின் வகுப்பில் ஒரு தனித்த மாணவரில் கவனம் செலுத்துவதற்கு அதிக நேரத்தினைக் கொண்டுள்ளார் என்பதாகும். உயர் விகிதாசாரத்தின் அர்த்தம் இதன் மறுதலையாகும்: ஆசிரியர் ஒருவர் அவரின் வகுப்பில் ஒரு தனித்த மாணவரில் கவனம் செலுத்துவதற்குக் குறைந்த நேரத்தினைக் கொண்டுள்ளார் என்பதாகும். 1 ஆம் வகைப் பாடசாலைக்கும் 3 ஆம் வகைப் பாடசாலைக்கும் இடையில் பட்டதாரி ஆசிரியர்களின் மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையிலான விகிதாசாரத்தினைக் கருத்தில் கொள்கையில், பட்டதாரி ஆசிரியர்கள் 3 ஆம் வகைப் பாடசாலைகளில் ஒப்புரவின்றிப் பரவப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது. தெளிவாகக் கூறுவதாயின், 2020 ஆம் ஆண்டில் 1 ஆம் வகைப் பாடசாலையில் ஒரு பட்டதாரி ஆசிரியருக்கு 32.8 மாணவர்கள் என்ற விகிதாசாரம் காணப்பட்டது. அதேவேளை, 3 ஆம் வகைப் பாடசாலையில், ஒரு பட்டதாரி ஆசிரியருக்கு 49.9 மாணவர்கள் என்ற விகிதாசாரம் காணப்பட்டது.

[5] பார்க்க, பாடசாலைத் தொகைமதிப்பு 2020 (*supra*). இந்த வரைவிலக்கணங்கள் பாடசாலைத் தொகைமதிப்பு அறிக்கையில் இருந்து எடுக்கப்பட்ட சொற்படியானவையாகும்.

எனவே, 2020 ஆம் ஆண்டில் பட்டதாரி ஆசிரியர்கள் 1 ஆம் வகைப் பாடசாலையில் செறிந்து காணப்பட்டனர். இப்பாடசாலைகள் ஏற்கனவே சிறந்த வளங்களைக் கொண்டவையாக இருந்தன. அதேவேளை, 3 ஆம் வகைப் பாடசாலைகள், ஒரே நேரத்தில் சார்பளவில் அதிக எண்ணிக்கையான மாணவர்களுக்குக் கற்பிப்பதற்குச் சொற்பமான பட்டதாரி ஆசிரியர்களையே கொண்டிருந்தன. உண்மையில், நடைமுறையில், 3 ஆம் வகைப் பாடசாலைகள் ஒரு பாடசாலை வாரத்தினுள் ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலை மூலமாக ஆசிரியர்களைச் சுழற்சி முறையில் பகிர்ந்துகொண்டன. நிச்சயமாக, உயர் வகுப்புக்களைக் கொண்டுள்ள பாடசாலைகளுக்கு இயல்பாகவே அதிகமான பட்டதாரி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். எவ்வாறாயினும், வெவ்வேறு பாடசாலைகள் சமமற்ற விதத்தில் நடத்தப்படுகின்றமையின் பல்வேறு மட்டங்களின் காரணமாக, வெவ்வேறு வகையான பாடசாலைகளுக்கு மிகவும் தகைமை வாய்ந்த ஆசிரியர்களை விநியோகிப்பதில் அரசாங்கம் போதிய சமநிலையினைப் பேணுகின்றதா என ஒருவர் ஆச்சரியப்படுவது நியாயமானதாகவே இருக்க முடியும். இக்காரணத்தினால், பாடசாலைத் தொகைமதிப்பினை மாத்திரம் வைத்துக்கொண்டு இந்தக் கேள்விக்கான பதிலைத் தேடுவது சாத்தியமற்ற ஒன்றாகும்.

பெருந்தொற்றின் தாக்கம் ஏற்படுவதற்கு முன்னர் இலங்கையின் கல்வி முறைமையினுள் நிலவிய ஒப்புரவின்மையின் நிலையினை மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வு எடுத்துக்காட்ட எண்ணுகின்றது. இப்பகுப்பாய்வு பாடசாலை முறைமை தொடர்பான மூன்று காரணிகளைப் பரிசீலனை செய்கின்றது – பாடசாலைகளின் சார்பளவான அளவுகள் மற்றும் மாணவர்கள் எவ்வாறு அப்பாடசாலைகளில் பரவப்பட்டுள்ளனர்; பாடசாலையின் அளவு மற்றும் மாணவர்களின் பரம்பல் என்ற விடயத்தினுள் தேசிய / மாகாண வித்தியாசத்தின் ஊடறுப்பு; இறுதியாக, வெவ்வேறு வகையான பாடசாலைகளில் தகைமை வாய்ந்த ஆசிரியர்களின் விநியோகம் (மற்றும் அதன் ஒப்புரவானதன்மை).[6] தொகுத்துக் கூறுவதாயின், இலங்கையிலுள்ள மாணவர்களின் பெரும் பகுதியினர் இலங்கையிலுள்ள மொத்தப் பாடசாலைகளில் 9% ஆன பாடசாலைகளிலேயே செறிந்துள்ளனர். இதில் கல்வி அமைச்சினால் நேரடியாக நிர்வகிக்கப்படும் தேசியப் பாடசாலைகள் அனைத்தும் அநேகமாக உள்ளடங்குகின்றன. இந்தப் பாடசாலைகள் அதிக எண்ணிக்கையிலான பட்டதாரி ஆசிரியர்களின் சேவையினையும் அனுபவித்துள்ளன. அதேவேளை, நாட்டில் மிகப் பாரிய அளவில் பரந்து காணப்படும் அளவில் மிகவும் சிறிய பாடசாலைகள், சம்பந்தப்பட்ட மாகாண நிர்வாகங்களால் நிர்வகிக்கப்படுவதுடன் இவை தரம் 5 வரையான அல்லது தரம் 8 வரையான வகுப்புக்களையே கொண்டுள்ளன என்பதுடன் இவற்றில் மிகச் சொற்பமான பட்டதாரி ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். பாடசாலைத் தொகைமதிப்பீட்டுத் தரவுகள் வெவ்வேறு வகையான பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் பற்றிய சமூக பொருளாதார விபரங்களை வழங்காவிடினும், இது பற்றிய ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட முடியுமாக இருப்பின் அது கவனத்தினைத் தூண்டுவதாக அமையும். குறிப்பாக, வருமான மட்டங்கள், தொழிற்கல்விப் பின்புலங்கள் மற்றும் வெவ்வேறு வகையான பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களின் சாதிய அடையாளங்கள் போன்றவற்றில் காணப்படும் ஏதேனும் கோலங்களைத் தீர்மானிப்பதற்கு உதவக்கூடியதாக இருக்கும்.

இலங்கையினுள் ‘‘பிரபலமான’’ பாடசாலைகள் என்ற ஒரு தோற்றப்பாடு நன்கறியப்பட்ட ஒன்றாகும். இலங்கைக் கல்வி மன்றினால் (EFSL) 2021, பெப்ரவரி 13 ஆம் திகதி நடத்தப்பட்ட ‘‘பாடசாலைகளுக்கு நிதியிடுவதில் ஒப்புரவின்மைகள்’’ என்பது தொடர்பான இணையவழிக் கொள்கைக் கலந்துரையாடல் இந்தத் தோற்றப்பாட்டினை விபரமாக எடுத்துக்காட்டியது.[7] இந்தக் கலந்துரையாடலுக்கு அமைவாக, 350 மாணவர்களைக் கொண்ட 2 ஆம் வகை மாதிரிப் பாடசாலை ஒன்றிற்கு (1 – 11 வரையான தரங்களைக் கொண்டது), அப்பாடசாலையின் மிகவும் அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு வருடாந்த வரவுசெலவுத் திட்டமாக 250,000 ஒதுக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், இத்தொகையில் 5-8% மாத்திரமே அரசாங்கத்தினால் நேரடியாக வழங்கப்படுகின்றது. வரவுசெலவுத் திட்டத்தின் மற்றொரு பகுதி அதிபரின் விசேட விண்ணப்பங்களின் பேரில் அரசாங்கத்தினால் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது (அதாவது, இந்தப் பகுதி அனைத்துப் பாடசாலைகளுக்கும் உத்தரவாதப்படுத்தப்படுவதில்லை). *அத்தியாவசிய* செலவுகளுக்கான வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தின் பெரும் பகுதி மாணவர் அபிவிருத்திச்

[6] பகுப்பாய்வு பட்டதாரி ஆசிரியர்களை மாத்திரம் கருத்திற் கொண்டாலும், அது பயிற்றப்பட்ட/பயிற்றப்படாத/பயிலுனர் ஆசிரியர்களுக்குத் தகைமையற்றவர்கள் அல்லது போதிய தகைமை பெறாதவர்கள் என்ற பண்பினை வழங்குவதை எவ்விதத்திலும் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக, பட்டதாரி ஆசிரியர்களின் பரம்பலின் ஒப்புரவானதன்மை ஆசிரியர்களின் ஒட்டுமொத்தப் பரம்பலின் ஒப்புரவானதன்மையின் அறிகுறியாக மட்டுமே எடுக்கப்பட்டுள்ளது.

[7] பார்க்க, இலங்கைக் கல்வி மன்று, ‘கொள்கை உரையாடல் #12: பாடசாலைகளுக்கு நிதியிடலில் ஒப்புரவின்மைகள்’ (13.2.2021),https://educationforum.lk/2021/02/policy-dialogue-12-inequities-in-funding-schools/ இல் கிடைக்கப் பெறும் (அணுகல் 25.1.2022) (Policy Dialogue video available in-post.)

சங்கத்தினாலும் (SDS) பெற்றோர்களின் பங்களிப்புக்களினாலும் சமாளிக்கப்படுகின்றது. பாடசாலையின் விசேட தேவைகளுக்கு, அதாவது, வெளிப்பாடவிதானச் செயற்பாடுகள், மாணவர் மற்றும் ஆசிரியர் விருத்தி போன்றவற்றுக்கு, அரசாங்கத்திடம் இருந்து எவ்விதமான உதவியும் பாடசாலைக்குக் கிடைப்பதில்லை. இவை சமுதாயத்தினுள் அதிபரின் நிதி திரட்டும் ஆற்றல்களிலேயே தங்கியுள்ளன. சில பாடசாலைகள், சாத்தியமாக இருப்பின், அவற்றின் ஆதனங்களை வாடகைக்கு விடுவதன் மூலமும் வருமானங்களைப் பெற்றுக்கொள்கின்றன. இதற்கு மாற்றமாக, கலந்துரையாடலில் பங்குபற்றிய ரோயல் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதி குறிப்பிடுகையில் தனது பாடசாலையின் வருடத்திற்கான இயக்கங்களுக்கான வரவுசெலவுத் திட்டம் மாத்திரம் பொதுவாக 200 மில்லியனை அண்மித்த தொகையாக உள்ளது எனத் தெரிவித்தார்.

இவ்வாறான ஒரு சூழமைவில், ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் என்பது பிரபலமான பாடசாலைகளில் இடம் பிடிப்பதற்காக 10 வயதே நிரம்பிய பிள்ளைகளில் அதீத அழுத்தத்தினை ஏற்படுத்துகின்றது. 'பிரபலமான' பாடசாலைகளில் இடம் கிடைக்கும் மாணவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அவசியம் கிடைத்தேயாகும் என்ற உத்தரவாதம் இல்லை என்றாலும் கூட அவ்வாறு இடம் கிடைக்காதவர்களுக்கு நாசம் என்பது அநேகமாக உறுதியான ஒன்று என்பதே அதிகமான பெற்றோர்களிடத்தில் காணப்படும் மரபுரீதியான ஞானமாக இருக்கின்றது. இது உண்மையாக இருப்பினும் இல்லாவிடினும், பாடசாலை முறைமையினுள் காணப்படும் வள விநியோகத்தின் பிரமிட் கட்டமைப்புப் பற்றிப் பாடசாலைத் தொகைமதிப்பீடு அறியாதிருப்பதோடு மாத்திரமன்றி பிரபலமான பாடசாலைகளில் இடம் பிடிப்பதன் முக்கியத்துவத்தினைப் பல வழிகளிலும் இக்கட்டமைப்பு வலுவூட்டுவதாகவும் இருக்கின்றது என்பதைப் பாடசாலைத் தொகை மதிப்பீட்டினை உன்னிப்பாக அவதானிக்கும்போது தெளிவாகின்றது. ''அண்மையிலுள்ள பாடசாலையே சிறந்த பாடசாலை'' என்ற அரசியல்வாதிகளின் பிரபலமான உச்சாடனத்தினையும் தாண்டியே இது நிகழ்கின்றது.

### *கொவிட் தொற்றுநிலையின் போது கல்வியும் தொடரும் ஒப்புரவின்மைகளும்*

பெருந்தொற்றின் காரணமாகப் பாடசாலைகள் மூடப்பட்டமையும் அதன் காரணமாக உருவான ''இணையவழிக் கல்வியும்'' மேலே விபரிக்கப்பட்டுள்ள கல்விச் சூழமைவுக்கான ஒப்புரவின்மைக்குப் புதிய பரிமாணங்களைச் சேர்த்துள்ளன.

### *தொலைக் கற்றல்*

அரசாங்கம் ''இணையவழிக் கல்விக்கு'' நகர்வதற்கான அதன் தீர்மானத்தினை அறிவித்த போதிலும், இந்தப் புதிய அணுகுமுறையின் மாதிரிகள் பற்றி அது விளக்கிக் கூறவில்லை. ஆரம்பத்தில், ''ஈ - தக்சலாவ'' என்னும் அதன் கிரமமான இணையவழிக் கற்றல் தளத்தைக் கல்வி அமைச்சு பயன்படுத்தியது. அதனுடன் சேர்த்து தொலைக்காட்சி அலைவரிசைகளில் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களையும் பயன்படுத்தியது. ஈ - தக்சலாவ தளம் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு மூன்று மொழிகளின் ஊடாகவும் 1 ஆம் தரம் முதல் 13 ஆம் தரம் வரை மாணவர்களுக்குப் பொருத்தமான பல்வேறு கற்றல் சாதனங்களுக்கான அணுகலையும் வழங்கியது. பெருந்தொற்றுக் காலப்பகுதியின் போது, எந்தவோர் இணையச் சேவை வழங்குனரின் மூலமும் தளத்திற்கான இலவச அணுகலை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.[8] அமைச்சும் இரண்டு பொதுத் தொலைக்காட்சி அலைவரிசைகளான சனல் ஐ மற்றும் நேத்ரா ஆகியவற்றில் அதன் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை 2020 ஏப்ரல் மாதத்தில் ஆரம்பித்தது. செய்திப் பத்திரிகைகளில் நேரசூசிகையினை வெளியிட்டு உயர்தர, சாதாரண தர மற்றும் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான பாடங்களைத் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கின.[9] எவ்வாறாயினும், இந்த இரண்டு அணுகுமுறைகளும் போதியதாக இருக்கவில்லை. இணையவழிக் கற்றல் தளம் எப்போதும் பாரம்பரியக் கற்பித்தல் அணுகுமுறைக்கான குறைநிரப்பலாகக் கருதப்பட்டதுடன் வகுப்பறைக் கற்றலை பதிலீடு செய்வதற்கான அல்லது பிரதிசெய்வதற்கான ஒன்றாக ஊக்குவிக்கப்படவில்லை. மறுபுறத்தில், தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் குறிப்பிட்ட மூன்று தரங்களுக்கு மட்டுமே சேவை வழங்கின. அப்போதும் கூட, வாராந்தத் தொலைக்காட்சி அட்டவணையினுள் ஒரு வகுப்பிற்கு ஏராளமான பாடங்களை வழங்கவேண்டிய நிர்ப்பந்தமும் காணப்பட்டது. இதற்கு அப்பால், ஈ-தக்சலாவ தளம் அனைத்து

[8] இலங்கை: மாணவர்களுக்கு ஈ - தக்சலாவ தளத்திற்கான இணைய அணுகல் தரவுக் கட்டணமின்றி இலவசமானதாகும் (colombopage.com) (25.3.2020)

[9] கல்வி அலைவரிசை நேரசூசிகை அறிவிக்கப்பட்டது' Daily News (28.4.2020)

மாணவர்களுக்கும் இணைய அணுகல் உள்ளது என ஊகித்ததுடன் தொலைக்காட்சியில் கற்பிக்கப்படும் பாடங்களில் கவனம் செலுத்துவதற்கு உகந்த சூழல் அவர்களுக்கு உள்ளது என்றும் ஊகித்தது. இந்த நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகளும் சந்தா செலுத்திப் பெறும் தொலைக்காட்சி சேவைகளும் (டயலொக் டிவி மற்றும் பியோ டிவி போன்றவை) கல்வி உள்ளடக்கங்களை வழங்குவதற்கு முன்வந்தன.



இதேவேளை, அனைத்து வகுப்புக்களுக்கும் கல்வியினை வழங்குவதற்கான தமது சொந்த முறைகளை ஆசிரியர்களும் அதிபர்களும் உருவாக்கத் தொடங்கினர். இந்த முறைகளுள் குழு அழைப்புக்களைப் பயன்படுத்தி வகுப்புக்களில் கற்பித்தல் அல்லது Zoom சந்திப்புக்கள், பாடங்களின் வீடியோ பதிவுகளை செய்தி அனுப்பும் செயலிகள் மூலம் அனுப்புதல், மின்னஞ்சல் மூலம் பாடக் குறிப்புக்களை PDF ஆக அனுப்புதல், அச்சிடப்பட்ட பாடக் குறிப்புக்களை இணைய வசதி இல்லாதவர்களுக்கு அனுப்புதல், குரல் அழைப்பு மூலம் மாணவர்களைத் தனித்தனியே பின்னாய்வு செய்தல் மற்றும் நேரடிச் சந்திப்பு போன்றவையும் உள்ளடங்குகின்றன. எவ்வாறாயினும், இந்த நடவடிக்கைகளும் கூட இல்லாத நிலையில், 2020 மே மாதத்திலேயே, தமது பிள்ளைகளின் கல்வியினைத் தொடரச் செய்வதில் பல்வேறு குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய செய்திகள் வர ஆரம்பித்தன.[10] பல குடும்பங்களின் மத்தியில் இணையவழிக் கல்வி தொடர்பான பாரிய தடையாக இணைய அணுகல் இல்லாமை காணப்பட்டது. ஒரு மட்டத்தில், சாதனங்கள் தொடர்பான பிரச்சினை காணப்பட்டது: சில குடும்பங்களிடம் சாதனங்களே இருக்கவில்லை, இணையவழிக் கல்வியில் ஈடுபடும் அளவுக்கு மேம்பட்ட மட்டத்தில் இணையத்தினை அணுகுவதற்கான ஆற்றல் இவர்களில் யாரிடமும் காணப்படவில்லை (3G அல்லது உயர் ஆற்றல்). மறுபுறத்தில், சில குடும்பங்களில் போதிய சாதனங்கள் இருக்கவில்லை – பல உடன்பிறப்புக்களைக் கொண்ட பிள்ளைகளின் குடும்பத்தில் ஒரு சாதனம் மட்டும் இருக்கையில் அப்பிள்ளைகளால் சமகாலத்தில் இணையவழிக் கல்வியினை அணுகமுடியவில்லை. சில பிள்ளைகள் அவர்களின் பெற்றோர்கள் வேலை செய்யும் மடிக்கணினிகளிலும் அல்லது பெற்றோர்களின் தொலைபேசிகளிலும் தங்கியிருந்தனர். வீட்டில் இருந்து வேலை செய்யும் தேவையுடைய பெற்றோர்களுக்கும் இவை சமகாலத்தில் தேவைப்பட்டன. மறுபுறத்தில், சாதனங்கள் கிடைக்கக்கூடியதாக இருந்தாலும் கூட, பல குடும்பங்களுக்கு தரவுகளை வாங்குதல் கட்டுப்படியானதாக இருக்கவில்லை. சாதாரண காலங்களிலேயே விலையுயர்ந்தவையாக இருந்த தரவுகள் பெருந்தொற்றின் போது வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டு அல்லது சம்பளங்கள் குறைக்கப்பட்ட நிலையில் குடும்பங்களால் ஈடுகொடுக்க முடியாத ஒன்றாக மாறின. உண்மையிலேயே, கொவிட் தொற்றுநிலைமைக்கு முன்னரான ஆய்வு ஒன்றின் படி, மக்கள் தொகையில் வறியோரான 60% ஆனோரினால் அவர்களின் மாதாந்த வருமானத்தின் சதவிகிதமாக 1 GB இற்கான செலவினைத் தாங்க முடியாதிருந்தது.[11] கிராமப் புறங்களில் வாழ்ந்த பிள்ளைகள் குறிப்பாக முகங்கொடுத்த பிரச்சினை, போதிய இணையச் சமிக்ஞைகள் இல்லாமையாக இருந்தது அல்லது கிடைத்த சமிக்ஞைகள் 3G ஆக அல்லது அதைவிட அதிகமானதாக இருக்கவில்லை. இக்காலப்பகுதியில், இணையவழி வகுப்புக்களில் கலந்துகொள்வதற்காக மாணவர்கள் அவர்களின் ஸ்மார்ட் தொலைபேசிகளுடன் மரங்களிலும் நீர்த்தாங்கிகளிலும் ஏறும் படங்கள் ஊடகங்களில் பரவலாகக் காணப்பட்டன. பிள்ளைகள் உள்ள குடும்பங்களில் 34% ஆன குடும்பங்களுக்கு மாத்திரமே இணைய அணுகல் இருந்ததாகவும் பிள்ளைகள் உள்ள குடும்பங்களில் 48% ஆன குடும்பங்களில்

---

[10] பார்க்க, e.g., "පාසල් දරුවන් සිටින පවුල්වලින් 66%කට ඉන්ටර්නෙට් නෑ" : ශ්‍රී ලංකාවේ ඔන්ලයින් අධ්‍යාපනය සාර්ථක වෙයි ද? - BBC News සිංහල (20.5.2020)

[11] Ayesha Zainudeen & Tharaka Amarasinghe, 'ஆசியாவின் அபிவிருத்தியடைந்துவரும் (global south) நாடுகளில் இலத்திரனியல் கற்றல் (E-learning) வாய்ப்புகள்' *LIRNEasia* (19.5.2020), https://lirneasia.net/2020/05/e-learning-opportunities-in-the-asian-global-south-presentation/ இல் கிடைக்கப்பெறும் (அணுகல்: 18.1.2022)

மாத்திரமே ஸ்மார்ட் தொலைபேசி அல்லது கணினி இருந்ததாகவும் பொதுவாக மேற்கோள் காட்டப்பட்ட LIRNEasia ஆய்வு குறிப்பிட்டது.[12]

### *ஆசிரியர்களுக்கான உதவி*

இதேவேளை, அரசாங்கத்துடனான ஆசிரியர்களின் அதிருப்தியானது தொலைக்கல்விக் காலப்பகுதி முழுவதும் மோசமடைந்து 2021 ஆம் ஆண்டின் முடிவின் போது உச்சக்கட்டத்தினை அடைந்தது.[13] இலங்கையில் ஆசிரியர்களும் அதிபர்களும் பாரதூரமான அநீதி என அவர்கள் கருதும் தங்களின் சம்பள முரண்பாட்டினைத் தீர்ப்பதற்காகத் தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் நீண்ட காலமாகப் போராடி வருகின்றனர். தொழிற்சங்க நடவடிக்கைகள் பெருந்தொற்று ஆரம்பிப்பதற்கு முன்னரான வருடங்களில் முன்னெடுக்கப்பட்டபோதிலும்[14] 2020 ஆம் ஆண்டிற்காகத் திட்டமிடப்பட்ட அவ்வாறான முதலாவது நடவடிக்கை மார்ச் 15 ஆம் திகதியாக இருந்தது. ஆனால் அப்போது கொவிட்-19 காரணமாகப் பாடசாலைகள் எதிர்பாராதவிதமாக மூடப்பட்டன.[15]

எவ்வாறாயினும், அவர்களின் அதிருப்தி எவ்வாறாக இருப்பினும், பல சிரேஷ்ட கல்வி அதிகாரிகள் முன்வராத நிலையில், ஆசிரியர்களும் அதிபர்களும் இணையவழிக் கற்றலுக்கான அவர்களின் சொந்த முறைகளை வடிவமைப்பதில் அதீத முன்னெடுப்பினைக் காட்டினர் என்பது நன்கு ஆவணப்படுத்தப்பட்ட உண்மையாகும்.[16] இருப்பினும், இந்த ஆசிரியர்கள் அரசாங்கத்தின் உதவி மிகவும் தேவைப்படுபவர்களாக இருந்தனர் என்பது விரைவில் தெரியவந்தது. அரசாங்கத்தின் எவ்விதமான பயிற்சியோ, வழிகாட்டலோ அல்லது பண உதவியோ இன்றி இணையவழிக் கல்வியினைத் தேவைக்கு ஏற்பத் தயார்செய்ததில் ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட செலவின அளவினை பிபிசி சிங்கள செய்தி அறிக்கையொன்று விபரித்திருந்தது.[17] வாரத்திற்குப் பல வகுப்புக்களுக்காக இணையவழிப் பாடங்களை நடத்துவதற்கு ஏற்படும் அதீத தரவுச் செலவுகளுக்கு மேலதிகமாக, இணையவழி வகுப்புக்கள் ஆரம்பிக்கும் வரையில் தம்மிடம் இல்லாதிருந்த சாதனங்களைப் (மடிக்கணினி மற்றும் ஸ்மார்ட் போன்கள் போன்றவை) பெற்றுக்கொள்வதில் தமக்கு ஏற்பட்ட செலவினையும் ஆசிரியர்கள் குறிப்பிட்டிருந்தனர். சில ஆசிரியர்கள் தமது சொந்தச் செலவில் Zoom அல்லது மைக்ரோசொப்ட் டீம் பொதிகளைக் கொள்வனவு செய்திருந்தனர். முழு முடக்கத்தின் போது, கிராமப் பிரதேசங்களில் வாழ்ந்த சில ஆசிரியர்கள், மாணவர்களைப் போன்றே இணையவழிப் பாடங்களை நடத்துவதில் போதிய அளவு உறுதியான சமிக்ஞைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது சிரமப்பட்டனர். அதிகமான ஆசிரியர்களின் பிள்ளைகளும் சடுதியாக இணையவழிக் கல்விக்கு மாறியதன் காரணமாகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தனர். இந்தப் பிள்ளைகளின் பெற்றோர்களான ஆசிரியர்கள், மாணவர்களுக்குப் பாடங்களைக் கற்பிப்பதற்காகவும் தமது சொந்தப் பிள்ளைகள் கற்பதற்கு உதவுவதற்காகவும், கிடைக்கக்கூடியதாக இருந்த அரிதான வளத்தினைப் பிரிக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகினர்.

இந்தச் சூழமைவிலேயே 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆசிரியர்களையும் அதிபர்களையும் பிரதிநிதித்துவம் செய்த பாரிய தொழிற்சங்கங்கள் பாரதூரமான தொழிற்சங்க நடவடிக்கைக் கட்டத்தினுள் நுழைந்தன. இதில் பகிரங்க ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் உள்ளடங்கின. இந்த நடவடிக்கைகளின் அங்கமாக, ஆசிரியர்களும் இணையவழிக் கல்வியில் இருந்து விலக ஆரம்பித்தனர். சம்பள முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட நிலையில் இணையவழிக் கல்விக்கு ஏற்படும் அதீத செலவுகளால் பாதிக்கப்படுவதாலும் இணையவழிக் கல்வி எனும் கேலிக்கூத்தினைத் தொடர்ந்ததன் காரணமாக வறிய மாணவர்கள் மீது

[12] LIRNEasia, *After Access: ஆசியாவிலும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் ICT அணுகலும் பயன்பாடும் (Version 3.0)*, (கொழும்பு, 2019).

[13] பார்க்க, e.g., பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி நாடு முழுவதும் ஆசிரியர்களும் அதிபர்களும் ஆர்ப்பாட்டத்தில் (newsfirst.lk) (25.10.2021)

[14] பார்க்க, e.g., ගුරු - විදුහල්පතිවරු ලෙඩවීම සාර්ථකයි - ලංකා ගුරු සංගමය - Aruna (13.3.2019)

[15] பார்க்க, https://abcnews.go.com/Health/wireStory/latest-indias-coronavirus-cases-continue-daily-decline-73965144 மற்றும் https://www.ips.lk/talkingeconomics/2021/06/07/mitigating-sri-lankas-covid-19-education-crisis-priority-areas-for-action/

[16] பார்க்க, e.g., UNICEF, ஆசியாவில் கல்வித் துறையின் மீது கொவிட்-19 இன் விளைவுகள் மற்றும் அதற்கான பதிற்செயற்பாடுகள் பற்றிய சூழ்நிலை அறிக்கை: இலங்கை சம்பவக் கற்கை(ஆகஸ்ட் 2021), pp. 28-29.

[17] අඹු දරු රැකුමට ලැබෙන සොච්චම ඔන්ලයින් වලට වැය කළ දිසාපාමොක් ඇදුරු පරපුර - BBC News සිංහල (28.7.2021)

விதிக்கப்பட்ட அநீதிகளின் பின்புலத்திலும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.[18] தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு இயைபுறுவதற்கு அரசாங்கம் பிடிவாதமாக மறுத்து தன்னிச்சையான கைதுகள் உள்ளிட்ட அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில், நவம்பர் மாதத்தில் வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது அந்த வரவுசெலவுத் திட்ட உரையில் நிதியமைச்சர் ஒரு துரித நடவடிக்கையினாலும் அதிகாரத்தின் பகட்டு வெளிப்பாட்டினாலும் சம்பள முரண்பாட்டினைத் தீர்த்துவைத்தார்.[19] எவ்வாறாயினும், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச இப்பிரச்சினையினை இவ்வளவு இலகுவாகவும் விரைவாகவும் தீர்த்துவைத்தமை அவர் ஏன் இதனை இதற்கு முன்பே தீர்க்கவில்லை என்ற கேள்வியினையே எழுப்புகின்றது.

***பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டம்***

கல்வி தொடர்பில் பெருந்தொற்று ஏற்படுத்திய ஒரு பாரிய விளைவு, பாடசாலைகள் மூடப்பட்டமை பிள்ளைகளின் போஷாக்கில் ஏற்படுத்திய தாக்கமாகும். 1931 ஆம் ஆண்டில் இருந்தே பாடசாலை உணவுத் திட்டத்தினை இலங்கை அமுல்படுத்தி வருகின்றது. தற்போதைய தேசிய உணவு நிகழ்ச்சித்திட்டம் 2003 ஆம் ஆண்டில் இருந்து அமுலாக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்காக அரசாங்கம் வருடாந்தம் கிட்டத்தட்ட 5 முதல் 6 பில்லியன் ரூபா வரை செலவிட்டு வருகின்றது. இத்திட்டம் 80 சதவிகிதமான அரசாங்கப் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டு வருவதுடன் இத்திட்டத்தினால் 1.1 மில்லியன் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.[20] இந்த நிகழ்ச்சித்திட்டம் 100 இற்குக் குறைவான மாணவர்களைக் கொண்டுள்ள சகல பாடசாலைகளையும் உள்ளடக்கி சில தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் 1 ஆம் தரம் முதல் 5 ஆம் தரம் வரையான மாணவர்களுக்கும் உணவளித்து வருவதுடன் விசேட கல்வி அலகினைச் சேர்ந்த மாணவர்களையும் உள்ளடக்குகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிகமாக, "கல்விக்காக உணவு" என்னும் முன்னெடுப்பினையும் (உலக உணவுத் திட்டத்துடனான பங்காண்மையுடன்) அரசாங்கம் நடத்திவருகின்றது. மேலும் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் பசும் பால் வழங்கும் திட்டத்தினையும் அமுல்படுத்தி வருகின்றது. பல பிள்ளைகளுக்கு, தேசிய பாடசாலை உணவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் உணவு அவர்களின் போஷாக்கிற்கு இன்றியமையாததாகும். இந்த உணவே பெரும்பாலும் அந்த மாணவர்கள் அன்றைய தினம் பெற்றுக்கொள்ளும் மிகவும் போஷாக்கான உணவாக இருக்கின்றது.[21]

ஆயினும், கொவிட்-19 இன் காரணமாகப் பாடசாலைகள் மூடப்பட்டதால் மாணவர்களுக்கு உணவினைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன், கல்வி அமைச்சு ஒரு மாதத்திற்குப் போதுமான வீட்டுக்கு எடுத்துச் செல்லக்கூடிய உலர் உணவுப் பொருட்களை "ஏறத்தாழ 78,000 பாடசாலை மாணவர்களுக்கு வழங்கியது"[22] என்றபோதும், முன்பு பாடசாலை உணவுத் திட்டத்தில் தங்கியிருந்த சுமார் 1.1 மில்லியன் மாணவர்களின் தேவைகளை இந்தத் திட்டத்தினால் சற்றேனும் நிறைவேற்ற முடியவில்லை. சிறுவர்களின் மத்தியிலும் வளரிளம் பருவத்தினரின் மத்தியிலும் போஷாக்கின்மை என்பது நீண்ட காலமாக ஒரு பாரதூரமான பொதுச் சுகாதாரக் கரிசனையாக இருந்து வருகின்ற ஒரு சூழமைவில், பாடசாலை உணவுத் திட்டம் குழப்பப்பட்டமையானது பல இலங்கை மாணவர்களின் சுகாதாரத்தினை மாத்திரம் பாதிக்காது அதன் நீட்டிப்பினால் அந்த மாணவர்கள் கல்விக்குத் திரும்புவதற்கான அவர்களின் எதிர்கால ஆற்றலினையும் பாதித்துள்ளது. பொதுவாக மிக மிக வறியவர்களான இப்பிள்ளைகளின் பெற்றோர்கள், இப்பிள்ளைகளின் இணையவழிக் கல்வியினை வசதிப்படுத்துவதற்கான மேலதிகச் செலவிற்கு மாத்திரம் முகங்கொடுக்காது, இப்பிள்ளைகளுக்கு அவர்கள் அவர்களின் வறுமையிலும் பாடசாலைகளின் மூலம் பெற்றுக்கொள்ளப் பழகிய போஷாக்கான உணவினை வழங்குவதற்கும் சிரமப்பட்டு வருகின்றனர்.

---

[18] பார்க்க, ஒரு வருடத்திற்கு முன்னர் வறிய மாணவர்கள் மீதான இணையவழிக் கல்வி அணுகுமுறையின் நியாயமின்மையினை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஸ்டாலின் விளக்குகின்றார்: "පාසල් දරුවන් සිටින පවුල්වලින් 66%කට ඉන්ටර්නෙට් නෑ" : ශ්‍රී ලංකාවේ ඔන්ලයින් අධ්‍යාපනය සාර්ථක වෙයි ද? - BBC News සිංහල (20.5.2020)

[19] මාස හයක සටන අවසන්. ගුරු විදුහල්පති අයවැයේ යෝජනාව පිළිගනී - ITN News දේශීය පුවත් (14.11.2021)

[20] உலக வங்கி, இலங்கையில் போஷாக்கிற்கான அரச நிதியினை மதிப்பிடல் (பெப்ரவரி 2020), available at: https://openknowledge.worldbank.org/bitstream/handle/10986/33419/PER-for-Nutrition-in-Sri-Lanka-Assessing-Public-Financing-for-Nutrition-2014-2018.pdf?sequence=5 இல் கிடைக்கப்பெறும் (அணுகல் 18.1.2022)

[21] பெருந்தொற்று ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து 39 பில்லியனுக்கும் மேற்பட்ட பாடசாலை உணவுகள் வழங்கப்படாமையினால் சூழ்ந்துள்ள போஷாக்கு நெருக்கடி– UNICEF and WFP (1.2.2021)

[22] *ibid.*

***பரீட்சைகள்***

2020 மார்ச் மாதத்திலேயே, தேசிய மட்டப் பரீட்சைகளின் மீது பெருந்தொற்றின் தாக்கம் பற்றி வெளியிடப்பட்ட வதந்திகளை முறியடிப்பதில் கல்வி அமைச்சு தீவிரமாகச் செயற்பட்டுக்கொண்டிருந்தது.[23] மே மாதமாகியும் கூட, உயர்தரப் பரீட்சைகள் பிற்போடப்படமாட்டாது என்ற தனது நிலைப்பாட்டினை அரசாங்கம் மீண்டும் வலியுறுத்திக்கொண்டிருந்தது.[24] ஆயினும், ஜூன் மாதமளவில், தம் பிடியில் தளர்ந்த அதிகாரிகள் எதிர்வரும் உயர்தரப் பரீட்சைகளும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளும் செப்டெம்பர் மாதத்திற்குப் பிற்போடப்படும் என அறிவித்தனர்.[25] ஆயினும், இதனைத் தொடர்ந்து, கல்வி அமைச்சரான டலஸ் அழஹப்பெரும திகதிகளை விரைவாக மீள் பரிசீலனை செய்வதைக் காணக்கூடியதாக இருந்தது. உயர்தரப் பரீட்சைகளை மேலும் பிற்போடுமாறு பல தரப்பினர்களும் விடுத்த வேண்டுகோளை அடுத்து அமைச்சானது பரீட்சைகள் நடைபெறும் திகதியினைத் தீர்மானிப்பதற்காக ''உயர்தர மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் முன்மொழிவுகளையும் ஆலோசனைகளையும்'' பரிசீலிக்கும் என அமைச்சர் தெரிவித்திருந்தார்.[26] பரீட்சைகளை மேலும் பிற்போடும் வேண்டுகோள்களுக்கான பிரதான காரணம், பெருந்தொற்றினால் உருவாக்கப்பட்ட பல்வேறு தடைகளினால் பல பாடசாலைகளிலும் பரீட்சைகளுடன் தொடர்புடைய முழுப் பாடத்திட்டங்களும் பூர்த்திசெய்யப்படாமையாகும்.

ஆயினும், ஒரு மாதம் கடந்த பின்னரும் கூட புதிய திகதிகள் அறிவிக்கப்படவில்லை. இந்த நிலையில் புதிதாகத் திறக்கப்பட்ட பாடசாலைகள், புதிய கொவிட் தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட காரணத்தினாலும் மாணவர்கள் மத்தியிலும் மூன்று தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட காரணத்தினாலும் மீண்டும் ஒரு வாரத்திற்கு மூடப்பட்டன.[27] எவ்வாறாயினும் விரைவில் புதிய திகதிகள் அறிவிக்கப்பட்டன. புலமைப்பரிசில் பரீட்சைகள் ஒக்டோபர் 11 ஆம் திகதி நடைபெறும் எனவும் உயர்தரப் பரீட்சைகள் ஒக்டோபர் 12 ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டன.[28] அத்துடன் 2021 ஜனவரிக்குப் பிற்போடப்பட்ட சாதாரண தரப் பரீட்சைகள் 2021 மார்ச் மாதத்திற்கு மேலும் பிற்போடப்பட்டன.[29]

இதற்கமைய, ஊரடங்கின் மத்தியில் உயர்தரப் பரீட்சைகளும் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைகளும் திட்டமிடப்பட்டவாறு 2020 ஒக்டோபரில் நடத்தப்பட்டன. பரீட்சைக்கான மாணவர் அனுமதி அட்டைகள் ஊரடங்கு அனுமதிப் பத்திரங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டன. தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுச் சிகிச்சை பெற்றுவந்த 16 மாணவர்கள் அவர்களுக்குச் சிகிச்சை வழங்கப்பட்ட தொற்றுநோய் வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட விசேட பரீட்சை நிலையத்தில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றினர்.[30]

அடுத்த வருடம், 2021 மார்ச் மாதத்தில் மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சைக்குத் தயார்படுத்திக் கொண்டிருக்கையில், பரீட்சையுடன் தொடர்புடைய அழகியல் பாடங்களுக்காகச் செயன்முறைப் பரீட்சைகளை நடத்துவதில் கல்வி அமைச்சு தளம்பல் போக்கினைக் கொண்டிருந்தது. ஆரம்பத்தில், செயன்முறைப் பரீட்சைகள் இடைநிறுத்தப்பட்டு மதிப்பீட்டுக்கான மாற்று முறை உருவாக்கப்படும் என அமைச்சு அறிவித்தது.[31] எவ்வாறாயினும், சில நாட்களின் பின்னர், இந்தத் தீர்மானத்தில் இருந்து மாறிய அமைச்சு செயன்முறைப் பரீட்சைகள் நடத்தப்படும் என அறிவித்தது. இந்த மாற்றத்திற்கான காரணங்கள்

[23] க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளைப் பிற்போடும் தீர்மானம் எடுக்கப்படவில்லை | Daily News (30.3.2020)
[24] சமூக ஊடகத்தில் பரப்பப்படும் க.பொ.த. உயர்தர நேரசூசிகையில் உண்மை இல்லை: பரீட்சைகள் ஆணையாளர் (newsfirst.lk) (25.5.2020)
[25] உ/த பரீட்சைகள் பிற்போடப்பட்டன (newsfirst.lk) (9.6.2020)
[26] கல்வி அமைச்சு 2020 உயர்தரப் பரீட்சைத் திகதியினை மீள் பரிசீலனை செய்யவுள்ளது(newsfirst.lk) (17.6.2020)
[27] பாடசாலை விடுமுறைகள் நீட்டிக்கப்பட்டன, உயர்தரப் பரீட்சைக்கான புதிய திகதிகள் தீர்மானிக்கப்படவுள்ளன. (newsfirst.lk) (18.7.2020)
[28] உயர்தரப் பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைக்கான புதிய திகதிகள் (adaderana.lk) (20.7.2020); தரம் 05 & உ/த பரீட்சைத் திகதிகள் அறிவிக்கப்பட்டன (newsfirst.lk) (20.7.2020)
[29] க.பொ.த. சா/த மார்ச் மாதத்தில் நடத்தப்படும் | Daily News (3.12.2020)
[30] 16 கொவிட்-19 தொற்றாளர்கள் ஐடிஎச் வைத்தியசாலையில் இருந்து உயர்தரப் பரீட்சை எழுதுகின்றனர் | Daily News (24.10.2020)
[31] 2020 க.பொ.த. சா/த செயன்முறைப் பரீட்சை இடைநிறுத்தம் (newsfirst.lk) (6.2.2021)

வழங்கப்படவில்லை. செயன்முறைப் பரீட்சைகள் மே மாதத்தில் நடத்தப்படத் திட்டமிடப்பட்டன.[32] சாதாரண தரப் பரீட்சைக்கான திகதிகள் நெருங்கிவருகையில், கொவிட்-19 தொற்றாளர்களான மாணவர்களுக்கென 40 விசேட பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் என அமைச்சு அறிவித்தது.[33] மார்ச் 1 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையில் 4,513 நிலையங்களில் நடத்தப்பட்ட பரீட்சைகளில் மொத்தமாக 622,305 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றினர்.

மார்ச் மாதத்தில் சாதாரண தரப் பரீட்சை நடத்தப்படுவதற்கு முன்னர் அப்போதைய கல்வி அமைச்சரான ஜி. எல். பீரிஸ், "எச்சூழ்நிலையின் கீழும் மாணவர்களின் காலம் வீணாக்கப்படாது" எனவும் "மாணவர்கள் அவர்களின் கல்வியினைத் தாமதம் இன்றிப் பூர்த்திசெய்வதற்கான ஒரு கட்டமைப்பினை உருவாக்குவதே கல்வி அமைச்சின் முன்னுரிமையாகும்" எனவும் விளக்கினார்[34]

இதேவேளை, முன்னைய வருடம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் 2021 மே மாதத்தில் வெளியிடப்பட்டன. பெறுபேறுகளின் படி பரீட்சைக்குத் தோற்றியவர்களில் கிட்டத்தட்ட 64% ஆனோர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிப்பதற்குத் தகைமை பெற்றிருந்தனர்.[35] எவ்வாறாயினும், பல்கலைக்கழகத்திற்கு உண்மையிலேயே அனுமதி பெறப்போகும் விண்ணப்பதாரிகளின் மொத்த எண்ணிக்கை இதுவரை அறியப்படாததாக இருக்கின்றது.

சாதாரண தரப் பரீட்சைகள் முடிவுற்ற உடனேயே, ஆகஸ்ட் மாதத்தில் (கொவிட் தொற்றுநிலைமைக்கு முன்னர் வழமையாக நடைபெற்றது போல்) 2021 ஆம் ஆண்டிற்கான உயர்தரப் பரீட்சையும் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையும் நடைபெறாது என அறிவிக்கப்பட்டதுடன் பரீட்சைகளுக்கான ஒரு புதிய திகதி வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.[36] பரீட்சைகள் ஒக்டோபரில் நடைபெறும் என ஜூலை மாதத்தில் அறிவிக்கப்பட்டது.[37] ஆயினும், முன்னைய வருடத்தினைப் போலவே, இந்தத் தீர்மானமும் சில நாட்களின் பின்னர் மாற்றப்பட்டு பரீட்சைகளுக்கான திகதிகள் மேலும் மீளாய்வு செய்யப்பட்டு உரிய காலத்தில் அறிவிக்கப்படும் எனக் கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.[38] பரீட்சைகள் நவம்பர் மாதத்தில் நடைபெறும் என அடுத்த வாரம் அறிவிக்கப்பட்டது.[39] ஆயினும், ஒக்டோபர் மாதமளவில், அப்போதைய கல்வி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சரான சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் பேசுகையில், பெருந்தொற்றின் காரணமாகவும் அப்போது நடைபெற்றுவந்த ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்க நடவடிக்கையின் காரணமாகவும் உயர்தரப் பரீட்சைத் திகதிகளும் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைகளும் நடத்தப்படவேண்டிய திகதிகள் மாற்றப்படவேண்டும் எனக் குறிப்பிட்டார்.[40] ஆயினும், பாராளுமன்றத்தில் பிரேமஜயந்த இவ்வாறு குறிப்பிட்ட போதும், இந்த விடயம் தொடர்பில் அமைச்சு இதுவரை எவ்விதமான உத்தியோகபூர்வ அறிக்கையினையும் வெளியிடவில்லை எனக் கூறி பிற்போடப்பட்டமையினை உறுதிப்படுத்தக் கல்வி அமைச்சு மறுத்துவிட்டதாக சில தினங்களின் பின்னர் வந்த செய்திகள் குறிப்பிட்டன.[41] இதேவேளை, பல்வேறு இக்கட்டுக்களின் காரணமாகப் பல பாடசாலைகள் முழுப் பாடத்திட்டத்தினையும் பூர்த்திசெய்யவில்லை என்பதைப் பரீட்சைகள் ஆணையாளர் ஏற்றுக்கொண்டு,

[32] சா/த பரீட்சை மதிப்பீடுகள் மார்ச் 27 இல் ஆரம்பம், செயன்முறைப் பரீட்சை மே மாதத்தில் நடத்தப்படும் | Print Edition - The Sunday Times, Sri Lanka (14.3.2021)

[33] 2020 க.பொ.த. சா/த: 40 விசேட பரீட்சை நிலையங்கள் (newsfirst.lk) (24.2.2021)

[34] 2020 உ/த பெறுபேறுகள் ஏப்ரலில் வெளியாகுமா (adaderana.lk) (28.2.2021)

[35] இலங்கை: 2020 உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய சுமார் 200,000 பரீட்சார்த்திகள் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகைமை பெற்றுள்ளனர். (colombopage.com) (4.5.2021)

[36] 2021 புலமைப்பரிசில் மற்றும் உயர்தரப் பரீட்சைகள் ஆகஸ்டில் நடைபெறாது (adaderana.lk) (14.2.2021)

[37] உயர்தரப் பரீட்சைகள் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டன | Daily News (9.7.2021)

[38] உ/த மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைத் திகதிகள் மேலும் மீளாய்வு செய்யப்படவுள்ளன (adaderana.lk) (11.7.2021)

[39] 5 ஆம் தரப் புலமைப்பரிசில் மற்றும் உயர்தரப் பரீட்சைகள் பிற்போடப்பட்டன | Daily News (19.7.2021)

[40] 2021 உ/த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகள் மீண்டும் மீளத் திட்டமிடப்பட்டுள்ளனவா (adaderana.lk) (7.10.2021); இலங்கையின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகள் மீண்டும் பிற்போடப்பட்டன | EconomyNext (7.10.2021)

[41] உ/த பரீட்சைகள் பிற்போடப்பட்டமை தவிர்க்கமுடியாதது, ஆனால் உத்தியோகபூர்வ அறிக்கை இல்லை – The Island (13.10.2021)

பரீட்சையினை நடத்துவது நியாயமற்றது எனக் குறிப்பிட்டார்.[42] அதேவேளை, சகல உயர்தரப் பரீட்சார்த்திகளுக்கும் பைசர் தடுப்பூசி ஏற்றப்படும் எனப் பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன செப்டெம்பர் மாதத்தில் அறிவித்த சூழமைவில்,[43] பரீட்சைகள் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்ட திகதியளவில் பரீட்சார்த்திகள் பூரணமாகத் தடுப்பூசியேற்றப்பட்டவர்களாக இருக்கும் வகையில் முதலாவது சுற்றுத் தடுப்பூசி வழங்கப்படவில்லை என்ற விமர்சனத்திற்கும் அரசாங்கம் முகங்கொடுத்தது.[44] இவ்வாறாக, ஒக்டோபர் மாதமளவில், பரீட்சைகளைப் பிற்போடுவதை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்த அமைச்சே மறுத்துவந்த போது, பரீட்சைகளை இன்னும் பிற்போடுவது தவிர்க்கமுடியாதது என்ற அடிப்படையில் பரீட்சைகள் நிர்வாகிகள் கலந்துரையாடல்களை நடத்தி வந்தனர். ஆயினும், நவம்பர் மாத ஆரம்பத்தில், பரீட்சைகள் பிற்போடப்படும் என்றும் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை 2022 ஜனவரி மாதத்தின் பிற்பகுதியிலும் உயர்தரப் பரீட்சைகள் பெப்ரவரி மாதத்தின் ஆரம்பத்திலும் சாதாரண தரப் பரீட்சைகள் மே மாதத்தின் பிற்பகுதியிலும் நடக்கும் என்றும் அமைச்சு அறிவித்திருந்தது.[45]

அதேவேளை, செப்டெம்பர் மாதத்தில், உயர்தரப் பரீட்சைக்கான மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான காலக்கெடு நீட்டிக்கப்படமாட்டாது எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்தார்.[46] உயர்தரப் பரீட்சைக்கான உரிய விண்ணப்பங்களில் 92% ஆனவை, பரீட்சைகள் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணையாளர் மேலும் தெரிவித்த அதேவேளை மாணவர் ஒருவரால் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போனால் சம்பந்தப்பட்ட அதிபரே அதற்கான பொறுப்பினை ஏற்கவேண்டும் என்ற சுற்றுநிருபத்தினைக் கல்வி அமைச்சின் செயலாளர் வெளியிட்டார்.[47] ஆயினும், கடைசி நேரத்தில் பரீட்சை பிற்போடப்பட்ட காரணத்தினால் விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு மீண்டும் ஒரு தடவை நீட்டிக்கப்பட்டது.[48]

கல்வி அதிகாரிகளிடம் இருந்து வெளிவந்த பரீட்சைகள் தொடர்பான தீர்மானங்களின் நிலையற்ற தன்மையிலான வீச்சினைப் பரிசீலிக்கையில், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது பரீட்சார்த்திகள் அதீத அழுத்தத்திற்கு உள்ளாயினர் என்பது தெளிவாகப் புலப்படுகின்றது. ஒருபுறத்தில், சம்பந்தப்பட்ட பாடத்திட்டங்கள் போதியளவு பூர்த்திசெய்யப்படுவதற்கு முன்னர் பரீட்சைகள் நடத்தப்பட்டுவிடுமோ என்ற அச்சம் காணப்பட்டது. மறுபுறத்தில், கடைசி நிமிடத்தில் கூட பரீட்சை அட்டவணைகளில் மாற்றம் நிகழ்வது பற்றிய நிச்சயமற்றதன்மை காணப்பட்டது. கொவிட் தொற்று ஏற்படுவதற்கான சாத்தியம் எங்கும் வியாபித்திருந்த அதேவேளை சில மாணவர்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகிச் சிகிச்சை பெற்றுவந்த காரணத்தினால் அவர்கள் வைத்தியசாலைகளில் அல்லது விசேட நிலையங்களில் பரீட்சையினை எழுதுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர் (வேறு காரணம் எதுவும் இல்லாதிருப்பின், சூழ்நிலை காரணமாக). இந்த நிகழ்வுகளின் காரணம் மாணவர்களின் சிறந்த நலனும் அவர்களின் கல்வியின் தொடர்ச்சியுமே எனக் குறைந்தது ஓர் அமைச்சராவது விளக்கியிருந்தாலும் கூட, அரசாங்கத்தின் இந்தத் தீர்மானங்களினால் எத்தனை மாணவர்கள் மிக மோசமாகப் பாதிக்கபட்டுள்ளனர் என ஒருவர் ஆச்சரியப்படுவது நியாயமானதே. உண்மையில், மிக அதிகமான மாணவர்கள் அவர்களின் வாழ்வினையும் தொழில்களையும் முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்திற்காக, குறிப்பாக அவர்களின் கல்வி பெருந்தொற்றின் பல்வேறு இடையூறுகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்காவிட்டால், இந்த மைல்கற்கள் மிகத் துரிதமாகக் கடக்கப்பட்டிருக்கவேண்டும் என்றே விரும்பியிருப்பார்கள் என்பது சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாகும். எவ்வாறாயினும், என்ன நடந்தாலும் நடத்தியே தீருவது என அரசாங்கம் வலியுறுத்திய பரீட்சைகளுக்கு முகங்கொடுப்பதற்குப் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள், சந்தேகத்துக்கிடமின்றி, அதீத இன்னல்களுக்கு முகங்கொடுக்கவேண்டியிருந்திருக்கும். அவர்களின் பெறுபேறுகளைப் பார்க்கையில், குறிப்பாக அவர்கள் வெற்றி பெற்றிருக்காவிட்டால், இந்த மாணவர்கள் என்றும் வியப்பிலேயே இருந்திருப்பார்கள் - *அரசாங்கம் விடயங்களை வித்தியாசமாகக் கையாண்டிருந்தால் எப்படியிருந்திருக்கும்?* அவர்கள் பதிலினை ஒருபோதும் அறிந்துகொள்ள மாட்டார்கள் என்பதே பாரிய துன்பியலாகும்.

---

[42] *ibid.*

[43] Pfizer கொவிட் தடுப்பூசி உயர்தரப் பரீட்சைப் பரீட்சார்த்திகளுக்குப் போடப்படும் | Daily News (21.9.2021)

[44] உ/த பரீட்சைகள் பிற்போடப்பட்டமை தவிர்க்க முடியாதது ஆனால் இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவுமில்லை – The Island (13.10.2021)

[45] சா/த, உ/த & 5 ஆம் தரப் பரீட்சைகளுக்கான (2021) திகதிகள் அறிவிக்கப்பட்டன (newsfirst.lk) (2.11.2021)

[46] உயர்தரப் பரீட்சைக்கான மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பக் காலக்கெடு நீட்டிக்கப்படமாட்டாது: பரீட்சைகள் ஆணையாளர் (newsfirst.lk) (15.9.2021)

[47] *ibid.*

[48] உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களுக்கான முடிவுத்திகதி நீட்டிக்கப்பட்டது | Daily News (9.11.2021)

***ஆண், 38 வயது, போர்த்துக்கேயப் பறங்கியர், கிழக்கு மாகாணம்:***

*"இணையவழிக் கல்வி என்பது நகரத்தவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டதாகும். பண நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் கிராமியக் குடும்பங்கள் பல கஷ்டங்களுக்கு முகங்கொடுத்தனர். கல்வி முறைமைக்கும் மாணவர்களுக்கும் கல்வி அமைச்சு எதையும் செய்யவில்லை.....*

*.....பல்கலைக்கழக மட்டத்தில், கல்விச் செயன்முறையினைத் தொடர்வதற்கு பல்வேறு வித்தியாசமான முன்னெடுப்புக்கள் காணப்படுகின்றன. மாணவர்களுக்கும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் இலவச தளத்தினை வழங்குவதற்காகக் கிழக்குப் பல்கலைக்கழகம் Zoom உடன் ஓர் ஒப்பந்தத்தினைக் கைச்சாத்திட்டிருந்தது. பல்கலைக்கழகத்திற்கு இலவச இன்டர்நெட் வசதிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சொற்பமான வசதிகளே காணப்படுவதுடன் தொழில்நுட்பம் பற்றிய குறைந்த அறிவே உள்ளது....*

*......அன்ட்ரொய்ட் தொலைபேசிகள் மற்றும் தரவுக் கட்டணங்கள் போன்றவற்றுக்காக ஆசிரியர்களும் மாணவர்களும் அவர்களின் சொந்தப் பணத்தினைச் செலவழிக்கவேண்டியிருந்தது. சில ஆசிரியர்கள் கல்விப் பொதிகளை உருவாக்கி அவற்றினை அச்சிட்டு எந்தவித உதவியும் இன்றி அச்சிடலுக்கான மற்றும் விநியோகத்திற்கான செலவுகளையும் ஏற்றுக்கொண்டனர். முழுமுடக்கத்தின் போது புகைப்படப் பிரதி எடுக்கும் நிலையங்களில் அதிகமானவை மூடப்பட்டிருந்த காரணத்தினால் அவற்றினைத் தேடி ஆசிரியர்கள் அலையவேண்டி நேரிட்டது.*

*மாணவர்களுக்கான சகல பாடங்களையும் பகிர்வதற்கு மும்மொழி வலைத் தளம் ஒன்றினை அரசாங்கம் முன்னெடுக்கலாம் என நான் நினைக்கின்றேன். பாடசாலைப் பாடவிதானம் ஒன்றாக இருப்பதால் பாடங்களை நடத்துவது இலகுவாக இருக்கும். செலவும் குறைவாக இருக்கும் என்பதுடன் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இது நிவாரணத்தினை வழங்கும். மேலும் மாணவர்களுடன் உள்ளடக்கங்களைப் பகிர்வதற்குத் தொலைக்காட்சி, வானொலி மற்றும் யுடியுப் போன்ற தளங்களைப் பயன்படுத்த முடியும். போர்த்துக்கலில் பெருந்தொற்றின் போது இவ்வாறுதான் கல்வி முறைமை பாடங்களை நடத்தியது என்பது எனக்குத் தெரியவந்தது."*

***கல்வி மறுசீராக்கல்கள்***

இந்தக் கட்டத்தில் எழுகின்ற இயல்பான கேள்வி நாம் இங்கிருந்து எங்கே செல்கின்றோம் என்பதாகும். இதை 2022 ஜனவரியில் எழுதுகையில், சமூகம், குறிப்பாக தலைநகர் – ஆரம்பத்தில் பெருந்தொற்று தாக்கியபோது ‘‘புதிய இயல்புநிலை’’ என நிலைமையினைத் தொடர்ச்சியாக வரவேற்றதைத் தாண்டி - இயல்புநிலைக்கும் திரும்புகின்றது என்ற அதீத உணர்வு காணப்படுகின்றது. ஆயினும், பழைய இயல்புநிலையோ அல்லது 2020 இற்கு முந்திய நிலையோ அல்லது பெருந்தொற்றுத் தாக்கியதில் இருந்து பெற்றுக்கொண்ட புதிய நிலையோ எவையுமே இலங்கையில் பெரும்பான்மையான பாடசாலை மாணவர்களை நியாயமாக நடத்தவில்லை. மறுசீராக்கல்களுக்கான தேவை தெளிவானதாக இருக்கின்றது. இருப்பினும் ஒரு கேள்வி தொடர்ந்து காணப்படுகின்றது, மறுசீராக்கல்கள் என்ன வடிவினை எடுக்கவேண்டும்?

2020 ஏப்ரல் மாதத்தில், பெருந்தொற்று ஏற்பட்ட உடனேயே, கல்வி அதிகாரிகள் மற்றும் பொது நிர்வாக அதிகாரிகள் உள்ளிட்ட 26 உறுப்பினர்கள் அடங்கிய கல்வி அலுவல்களுக்கான ஜனாதிபதி செயலணியினை ஜனாதிபதி நியமித்தார். 2020 ஜூலை மாதமளவில், இலங்கையில் பொதுக் கல்விக்கான மறுசீராக்கல்களுக்கான முன்மொழிவுகளின் பரிபூரணமான ஒரு தொகுதியினைச் செயலணி வெளியிட்டது.[49] பரிந்துரைகள் பரந்த வீச்சிலான தொனிப்பொருட்களைக் கொண்டிருந்தன. அவற்றுள் கல்வி உத்திகளை நவீனமயப்படுத்துவது, மாணவர் மதிப்பீட்டு அணுகுமுறைகளை நிலைமாற்றுவது, பல்வேறு கட்டங்களிலான பாடவிதானக் கட்டமைப்பு, பட்டம் பெறுவதற்கான மாற்று வழிகள் போன்றவை உள்ளடங்கியிருந்தன. இந்தக் கலந்துரையாடல் ஆவணம் கல்வி ஒப்புரவு எனும் விடயத்திற்குப் பொருத்தமான அளவுக்குச் சில பிரதான முன்மொழிவுகளைக் கோடிட்டுக்காட்டி, உன்னிப்பான வாசிப்பிற்காக வாசகரின் கவனத்தினை மூல ஆவணத்திற்கு ஆற்றுப்படுத்துகின்றது.

***பாடசாலைகளின் வகைப்படுத்தல்***

இந்த ஆவணத்தின் வேறு இடங்களில் விபரிக்கப்பட்டுள்ள பாடசாலை வகைப்படுத்தல் முறைமையில் உள்ளார்ந்ததாக இருக்கும் எண்ணற்ற பிரச்சினைகளை அறிக்கை கோடிட்டுக் காட்டுகின்றது. அறிக்கை கோடிட்டுக் காட்டியுள்ள ஒரு பிரதான விடயம், ஒரு குறிப்பிட்ட பாடசாலையின் வகைப்படுத்தலுக்கும் அந்தப் பாடசாலையின் அதிபரின் சம்பளத்திற்கும் இடையிலான தொடர்பாகும். இது அப்பட்டமாக உயர் ஊதியத்தினைப் பெறுவதற்காக அவ்வாறான வகைக்குப் பொருத்தமான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாமலேயே (வள–அடிப்படையிலான) உயர் வகைக்கு மீள்வகைப்படுத்தலை முன்னெடுப்பதற்காக 2 ஆம் வகை மற்றும் 3 ஆம் வகைப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு முறையற்ற விதத்தில் ஊக்குவிப்பினை வழங்குகின்றது. மறுபுறத்தில், குறைந்த ஊதியத்துக்கும் ஆரம்பப் பாடசாலைகளுக்கும் இடையிலான இணைப்பின் காரணமாக ஆரம்பப் பாடசாலைகளுக்கு உயர்ந்த தரத்திலான அதிபர்களைக் கல்வி நிர்வாகிகள் தேர்ந்தெடுப்பதை இந்த விடயம் கடினமானதாக்குகின்றது. இதே பிரச்சினை 2 ஆம் வகை மற்றும் 3 ஆம் வகைப் பாடசாலைகளுக்கும் பொருத்தமாகும். இப்பாடசாலைகளில் ஆரம்ப மட்டங்களில் கற்பிப்பவர்களுக்குக் குறைந்த ஊதியமே வழங்கப்படுகின்றது. இது சிறந்த தகைமை பெற்ற ஆசிரியர்கள் உயர் வகைப் பாடசாலைகளில் தொழில் தேடக் காரணமாக அமைவதுடன் இலங்கையின் பெரும்பான்மையான பாடசாலைகளாகச் சிறிய பாடசாலைகளே இருக்கின்ற போதிலும், திறன் படைத்த ஆசிரியர்கள் அவற்றில் இருந்து வெளியேறுவதற்கும் காரணமாக அமைகின்றது. 1AB வகைப் பாடசாலைகளே (அதாவது, உயர்தரத்தில் விஞ்ஞானப் பாடப் பிரிவினைக் கொண்டுள்ள பாடசாலைகள்) ‘‘சிறந்த பாடசாலைகள்’’ என்ற புலனுணர்வு, பாடசாலைகளின் செயலாற்றுகையினை மதிப்பிடுவதற்கான பிரதான

[49] இலங்கையின் கல்வி அலுவல்கள் பற்றிய ஜனாதிபதி செயலணி, *இலங்கையில் கல்வி பற்றி மீள சிந்தித்தல்*, vol-II, Core Group Reports (n.d.), [http://nec.gov.lk/wp-content/uploads/2020/10/5.Re-imagining-Education-in-Sri-Lanka-Vol-II-Core-Group-Reports-by-Presidential-Task-Force.pdf](http://nec.gov.lk/wp-content/uploads/2020/10/5.Re-imagining-Education-in-Sri-Lanka-Vol-II-Core-Group-Reports-by-Presidential-Task-Force.pdf) இல் கிடைக்கப்பெறும் (அணுகல் 24.1.2022)

தெரிவடிப்படையான மாணவரை மையப்படுத்திய தரமான கல்வியின் மீதான கவனக்குவிப்பினை அகற்றுகின்றது. மறுபுறத்தில், அறிக்கைக்கு அமைவாக, அதிகமான பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் 1AB வகைப் பாடசாலைகளிலேயே கவனம் குவிக்க எத்தனிக்கின்றன. இது ''பிரபலமான'' பாடசாலைகள் என்ற புலனுணர்வினை வலுப்படுத்துகின்றது. நடப்பிலுள்ள முறைமையின் திரட்டிய விளைவு சிறிய பாடசாலைகளில் இருந்து வளங்களை அகற்றுகின்றது. அதிபர்களையும் ஆசிரியர்களையும் அகன்று செல்லச் செய்கின்றது. இவ்வாறான பாடசாலைகள் மூடப்படும் அச்சத்தில் தொடர்ந்து இருக்கும் அளவுக்கு மாணவர்கள் பாடசாலையில் சேர்வதில் இருந்தும் ஊக்கம் கெடுக்கப்படுகின்றனர். இயல்பாகவே வறியவர்களின் பிள்ளைகளும் செல்வாக்கில்லாதவர்களுமே இவற்றில் சென்று இணைகின்றனர்.

இது தொடர்பான பிரதான முன்மொழிவு, தற்போதுள்ள வகைப்படுத்தல் முறைமையினை இல்லாதொழித்து சகல பாடசாலைகளும் ஒன்றில் ஆரம்பப் பாடசாலைகளாக அல்லது இரண்டாம் நிலைப் பாடசாலைகளாக வகைப்படுத்தப்பட்டு தற்போது ஆரம்பப் பிரிவுகளையும் இரண்டாம் நிலைப் பிரிவுகளையும் கொண்டுள்ள சகல பாடசாலைகளும் ''கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படும் வகையில்'' பிரிக்கப்பட்டு, அவற்றின் ஆரம்பப் பிரிவுகளைச் சுயாதீனமான பாடசாலைகளாக நடத்துவதற்கு அனுமதிக்கும் ஒரு முறைமைக்கு நகர்வதாகும். இந்த முன்மொழிவின் எதிர்பார்ப்பு ஆரம்பப் பாடசாலைகளின் வலையமைப்பு (உள்ளூர்) ஒன்றினை உருவாக்குவதாகும். இவை இவ்வாறான வலையமைப்புக்கு என ஒதுக்கப்பட்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகளுக்கு வளங்களை வழங்கும். இவ்வாறான இரண்டாம் நிலைப் பாடசாலைகளினுள் 1000 தேசிய பாடசாலைகளின் உருவாக்கத்தினை அறிக்கை முன்மொழிகின்றது. எனவே, வலையமைப்பாக்கப்பட்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் மத்தியில் உயர்தரப் பாடப் பிரிவுகள் வினைத்திறன் மிக்க முறையில் விநியோகிக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவற்றிற்கு மீள் விஜயம் மேற்கொள்ளப்படும். இதனால் பல்வேறு பிரிவுகளைக் கற்பிக்கும் பாடசாலைகளில் செறிந்துள்ள வளங்களை மீள்விநியோகம் செய்ய முடியும். இவ்வாறான வளங்கள் வீணாவதாக அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. மேலும், அதிபர்களின், ஆசிரியர்களின், கல்விசாராப் பணியாளர்களின் நியமனங்கள் தேவை அடிப்படையிலான அணுகுமுறையினை மட்டுமே கொண்டிருக்கும் என்பதுடன் உயர் சேவைத் தரங்களிலுள்ள அதிபர்கள் குறிப்பாக ஆரம்பப் பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படுவார்கள் என்பதுடன் அவர்களுக்கு ஊக்குவிப்புப் பொதிகளும் வழங்கப்படும். முன்மொழியப்பட்டுள்ள இந்தப் புதிய அணுகுமுறை பாடசாலை நிர்வாகத்தினைச் சிக்கனமிக்க முறையில் சீர்திருத்தஞ்செய்யும் என்றும் உயர் தரத்திலான இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் உருவாக்கத்தினை அனுமதிக்கும் என்றும் பிரபலமான பாடசாலைகளுக்கான போட்டியினைக் குறைக்கும் என்றும் வள ஒதுக்கீடு என்ற அடிப்படையில் ஆரம்பப் பாடசாலைகள் மீது அதிக கவனத்தினைச் செலுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பிலான மற்றொரு பிரதான முன்மொழிவு வளப் பகிர்வு தொடர்பானதாகும். பாடசாலைகளின் மத்தியில் பௌதிக வளங்களின் விநியோகம் பற்றிய புள்ளிவிபரங்களை இந்த அறிக்கை கோடிட்டுக்காட்டுவதுடன் (சகல பாடசாலைகளிலும் 3,800 பாடசாலைகள் மாத்திரம் எவ்வாறு ICT ஆய்வுகூடங்களைக் கொண்டுள்ளன மற்றும் சாதாரண தர வகுப்புக்களைக் கொண்டுள்ள பாடசாலைகளில் 52% ஆனவை மட்டும் எவ்வாறு O/L ஆய்வுகூடங்களைக் கொண்டுள்ளன போன்றவை), ஒரு குறிப்பிட்ட பாடசாலையினுள் செறிந்துள்ள வளங்களைப் பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் அணுகுவதற்கான வளப் பகிர்வு மாதிரிகளின் உருவாக்கத்தினை ஆலோசனையாக முன்வைக்கின்றது. இதேபோன்று, அறிக்கைக்கு அமைவாக, இலங்கையில் மொத்த ஆசிரியர் பற்றாக்குறை 66,512 ஆக இருக்கின்ற அதேவேளை இலங்கையில் மொத்த ஆசிரியர் மிகை 41,512 ஆகும். எனவே, அடையாளம் காணப்பட்ட தெரிவடிப்படைக்கு அமைவாக பாடசாலை முறைமையினை ஒழுங்கமைப்பதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தின் தேவையினையும் அறிக்கை கோடிட்டுக்காட்டுவதுடன் ''மத்திய பாடசாலை'' ஒன்றுடன் வளங்களைப் பகிர்ந்துகொள்வதற்காகப் பாடசாலைகளின் வலையமைப்புக்களுக்கான தேவையினையும் கோடிட்டுக்காட்டுகின்றது.

ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களும் அதிபர்களும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளுக்கு நிகராக ஊக்குவிக்கப்பட்டு உற்சாகப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்படுவர். ஆரம்பப் பாடசாலை அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் சம்பளக் கட்டமைப்பும் ஏனைய நலன்களும் சாத்தியமாக இரண்டாம் நிலைப் பாடசாலைப் பணியாளர்களுக்கு நிகராகத் தரமுயர்த்தப்படுவதற்கு முன்மொழியப்படுகின்றது. ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும், குறிப்பாக கிராமப் பிரதேசங்களில் கஷ்டமான இடங்களில் சேவையாற்றுபவர்களுக்கும், மேலதிக நிதி ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டு அவர்களின் செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டங்களிலும் மாற்றங்களிலும் பதவியுயர்வுகளிலும் விசேட அங்கீகாரம் வழங்கப்படும். ஆரம்பப்

பாடசாலை ஆசிரியர்களுக்கு ஆரம்ப மட்டக் கல்விக்கான விசேட பயிற்சி வழங்கப்படும். மேலும் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளில் கல்வி பெற்றுள்ள ஆசிரியர்கள் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களாக மாறுவதற்கும் ஊக்குவிக்கப்படுவர்.

*மாணவர் மதிப்பீடு*

5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரணதரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சை ஆகிய மூன்று பரீட்சைகளில் மாத்திரம் கவனம் குவிக்கும் மாணவர் மதிப்பீட்டின் தற்போதைய முறைமையுடன் தொடர்புடைய பிரச்சினைகளையும் செயலணியின் அறிக்கை கோடிட்டுக் காட்டியுள்ளது. ''திரட்டிய மதிப்பீட்டு'' அணுகுமுறையினை அடிப்படையாகக் கொண்டுள்ள இந்த முறைமையில் இருந்து விலகி ''விருத்திசார் மதிப்பீட்டு'' அணுகுமுறையினை அடிப்படையாகக் கொண்ட ஒரு முறைமைக்கு மாறுவதை அறிக்கை முன்மொழிகின்றது. முன்மொழியப்பட்டுள்ள முறைமையில் மாணவர்களின் கற்றலானது மதிப்பீடுகளின் மூலம் தொடரான அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது. இது சில மணித்தியாலங்கள் நீடிக்கும் எழுத்துப் பரீட்சைக்கு விடயப் பொருளினைத் திணிப்பதற்கான பிள்ளைகளின் ஆற்றல் மீதான கவனத்தினை நகர்த்தி, மாறாக பிள்ளைகளின் ஆக்கத்திறன், அழகியல், விளையாட்டு மற்றும் சமுதாயப் பணி போன்றவற்றில் கவனம் குவிக்கின்றது. புறவயமான தன்மையினையும் நியாயமான தன்மையினையும் பேணுவதற்காக அறிக்கையானது குழாம் அடிப்படையிலான மதிப்பீடுகளையும் பரிந்துரைக்கின்றது.

ஆயினும், தற்போதைய சூழமைவில் தரம் 5 புலமைப்பரிசில் வகிக்கும் வகிபாத்திரத்தினைப் புறக்கணிக்காது, 5 ஆம் தரத்தில் நடத்தப்படும் எளிய சோதனைகளின் அடிப்படையில் திறமையும் தேவையும் உள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை அறிக்கை முன்மொழிகின்றது. மேலும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள பிள்ளைகளுக்கு 1 ஆம் தரத்தில் இருந்து கற்றல் உதவி மானியம் ஒன்று, சாத்தியமெனின், குடும்ப அடிப்படையிலான மானியக் கொடைகள், வழங்கப்படவேண்டும் என்ற ஆலோசனை முன்வைக்கப்படுகின்றது. குறைந்த வருமானம் பெறும் பிரிவினைச் சேர்ந்த (குறித்தொதுக்கப்பட்ட வருமான மட்டத்திற்குக் கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் மட்டுமே சோதனைக்கு விண்ணப்பிப்பதற்கு இயலுமானவர்களாக இருப்பர்) அதீத ஆற்றல் மிக்க மாணவர்களை அடையாளம் காண்பதற்கு உணர்வு ரீதியான புலமை, பொது உளச்சார்பு மற்றும் அத்தியாவசியமான கற்றல் தகைமைகள் ஆகியவற்றில் கவனம் குவிக்கும் எளிய சோதனை நடத்தப்படவேண்டும் என முன்மொழியப்படுகின்றது. இரண்டாம் நிலைப் பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான தெரிவினை மேற்கொள்வதற்காக தரம் 5 புலமைப்பரிசில் ஒரு பொருத்தமான, எளிய சோதனையின் மூலம் பதிலீடு செய்யப்படும். ஆரம்பப் பாடசாலைகளின் உள்ளூர் வலையமைப்புக்களினால் வளங்கள் வழங்கப்படும் ஆயிரம் (1000) இரண்டாம் நிலைப் பாடசாலைகளை நிறுவுதல் பிரபலமான பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான பெற்றோர்களின் போட்டியினைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், மாணவர்கள் பாடசாலையில் இருக்கையிலேயே அவர்களுக்காகத் தொழிற்கல்வி, பல்தொழில்நுட்பக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி மற்றும் ஏனைய மாற்றுக் கல்விகளை வழங்கல் உள்ளிட்ட பட்டம் பெறலுக்கான பல்வேறு வழிகளை அறிக்கை ஆலோசனையாக முன்வைப்பதுடன் மாணவர்களின் எதிர்காலத்தினைத் தீர்மானிப்பதில் சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகள் வகிக்கும் வகிபாத்திரத்தின் மீதான வலியுறுத்தலை அகற்றுவதையும் பரிந்துரைக்கின்றது. இதேபோன்று, கணிதக் கல்வியின் இரட்டை அடுக்கு எண்ணக்கருவினையும் அறிக்கை மேம்படுத்துகின்றது. இதில், மேல்நிலை கணிதக் கல்வியினைப் பின்தொடர எதிர்பார்த்திராத மாணவர்கள் செயன்முறை மட்டத்தில் மட்டும் கணிதத்தினைக் கற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றனர். முன்மொழிவுகள் பல் மட்டங்களை விபரிக்கின்றன. இதில் சாதாரணதரத்தின் பின்னர் அல்லது உயர்தரத்தின் பின்னர் மாணவர்கள் தொழிற்பயிற்சிக்கு முன்னேறலாம்.

*ஆசிரியர் விருத்தி*

இலங்கையின் கல்வி முறைமையினுள் ஆசிரியர்கள் கிடைக்கக்கூடியதாக இருத்தலுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்களின் அடிப்படையில், ஆசிரியர் விருத்திப் பரப்பில் அறிக்கை குறிப்பிட்ட சில பரிந்துரைகளை வழங்குகின்றது.

இவற்றுள் பிரதானமானது, கற்பித்தல் உரிமம் வழங்கும் முறைமையின் அறிமுகமாகும். இது ஆசிரியர்களின் சான்றுப்படுத்தலை வசதிப்படுத்துகின்றது. மாணவர்களின் திறன்களைப் பரந்த அளவில் விருத்தி செய்வதன்

மூலமும் திறனாய்வுமிக்க சிந்தனையினை உள்ளடக்குவதன் மூலமும் கற்றலில் உற்சாகத்தினை உள்ளடக்குவதன் மூலமும் பரோபகாரம் மற்றும் பச்சாதாபம் போன்ற சமூக உளச்சார்புகளை உள்ளடக்குவதன் மூலமும் மாணவர்களின் எதிர்காலத்திற்கு வழிகாட்டுவதற்கு ஆசிரியர்களுக்கு உதவுவதற்கு ஆசிரியர் பயிற்சி மேம்படுத்தப்படும். ஆசிரியர்களின் சமூக அந்தஸ்தினை உயர்த்துவதன் முக்கியத்துவத்தினை அறிக்கை கோடிட்டுக்காட்டுகின்றது. குறிப்பாக, அதிசிறந்த கல்வி முறைமையினை உருவாக்குவதில் போதிய ஊதியம் மற்றும் நலன்கள் மூலம் ஆசிரியர்களின் சமூக அந்தஸ்தினை உயர்த்துவதை அறிக்கை கோடிட்டுக்காட்டுகின்றது. மேலும், கல்விச் சேவைகள் பரப்பினுள் ஆசிரியர் சேவையின் உன்னதத்தினைக் கோடிட்டுக்காட்டும் அறிக்கை, இலங்கை கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவை ஆகியவற்றில் சகல நியமனங்களுக்கும் வகுப்பறை இடையீடு ஒரு முன் தேவைப்பாடாக இருக்கவேண்டும் என்பதை ஆலோசனையாக முன்வைத்து, அனைத்துக் கல்விச் சேவைகளுக்கும் ஆசிரியர் சேவையே நுழைவு மட்டமாக இருக்கவேண்டும் என ஆக்குகின்றது. ஆசிரிய ஆலோசகர்களை 'கற்றல் செயன்முறை ஒருங்கிணைப்பாளர்கள்' என நிலைமாற்றுவதனையும் அறிக்கை முன்மொழிகின்றது. இவர்கள் தேசிய கல்வி நிறுவனத்திற்கும் வகுப்பறைக்கும் இடையில் இணைப்பாகச் செயற்பட்டு புதிய அறிவினை ஆசிரியர்களுடன் பகிர்ந்து ஆசிரியர்களுக்கு மாதிரி வகுப்புக்களை நடத்தி கற்பித்தல் மாதிரிகள், கற்றல் செயன்முறைகள் பற்றி ஆசிரியர்களுடன் கலந்துரையாடலையும் ஊக்குவிப்பர்.

*முடிவு*

பெருந்தொற்று அதீத அழுத்தத்தினை ஏற்படுத்தியுள்ளபோதும் கல்வித் துறைக்குத் தேவைப்படும் மறுசீராக்கல்கள் பற்றிய புத்தம் புதிய சிந்தனைகள் உயர் நிறுவன மட்டங்களில் இடம்பெற்று வருகின்றன. இப்புதிய கொள்கைப் பாதைகளை ஆராய்வதில் காணப்படும் தெளிவான தடை அரசியல் ஆர்வமின்மையாகும் (நாம் துணிச்சல் என அதைத் துணிந்து கூறலாமா?). தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட பொறிமுறையினால் வெளியிடப்பட்ட மறுசீராக்கல் முன்மொழிவுகள் பூரணமானவை என்பது தெளிவாகத் தெரிந்த போதிலும், இதே அரசாங்கத்தின் தொடர்ச்சியான வரவுசெலவுத் திட்டங்கள் இந்த முன்மொழிவுகளுக்கெனப் பெரிதாக எதையும் செய்யவில்லை. அரசாங்கத்தினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டது போலத் தெரியும் ஒரே ஒரு பரிந்துரை 1000 தேசிய பாடசாலைகளின் உருவாக்கமாகும் - இது தொடங்கிவைப்பதற்கு ஒரு புத்தாக்கமிக்க முன்மொழிவாக இருக்கவில்லை. உண்மையில், 2020 மார்ச் மாதத்தில், பெருந்தொற்று நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுவதற்குச் சில நாட்களின் முன்னர், கல்வி அலுவல்கள் பற்றிய ஜனாதிபதி செயலணி உருவாக்கப்படுவதற்குச் சில வாரங்களின் முன்னர், மேற்குறிப்பிட்ட 1000 தேசிய பாடசாலைகள் முன்னெடுப்பிற்கு அமைவாகத் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையினை 500 ஆக அதிகரிக்கும் நிலையில் அரசாங்கம் இருந்தது.[50] பெருந்தொற்றினால் இந்தத் திட்டங்கள் பாழ்படுத்தப்பட்ட அதேவேளை (2020 ஆம் ஆண்டின் பாடசாலைத் தொகைமதிப்பீடு 373 தேசிய பாடசாலைகள் மாத்திரமே இருப்பதாக அறிக்கையிடுகின்றது), 1000 தேசிய பாடசாலைகள் முன்னெடுப்புக்கு உயிரூட்டப்பட்டுள்ளது.[51] எவ்வாறாயினும், மேலே கலந்துரையாடப்பட்டவாறாக, சகல பாடசாலைகளையும் ஒன்றில் ஆரம்பப் பாடசாலையாக அல்லது இரண்டாம் நிலைப் பாடசாலையாக இருகூறாகப் பிரிப்பதற்கான ஜனாதிபதி செயலணியின் பரந்த முன்மொழிவின் சூழமைவில், 1000 தேசிய பாடசாலைகளை நிறுவுவதை ஜனாதிபதி செயலணி பரிந்துரைப்பதைக் கவனத்தில் கொள்வது சிறந்ததாகும். இவ்வாறு இரண்டாகப் பிரிக்காமல் 1000 தேசிய பாடசாலைகளை நிறுவுவது இந்தக் கலந்துரையாடல் ஆவணத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள ஒப்புரவின்மைகளை அகற்றுவதற்குப் பெரிதாக எதையும் செய்யாது என்பதுடன் அவற்றினை மேலும் மோசமாக்குவதற்கே வழிவகுக்கும்.

பெருந்தொற்றின் தாக்கத்தின் மிக மோசமான தாக்கம் கல்வி உள்ளிட்ட சலக அம்சங்களிலும் மிகவும் வறியவர்களையே பாதித்துள்ளது என்பது நிச்சயமான ஒன்றாக இருக்கும் அதேவேளை, இந்த உண்மையினை எடுத்துவிளக்கும் வன்தரவுகள் (எண்ணிக்கைகள் மற்றும் வரைபுகள்) வலுவற்றதாகவும் எதிர்காலம் பற்றிய ஊகங்களின் பல மட்டங்களில் தங்கியுள்ளதாகவும் இருக்கின்றன. உலகம் முழுவதும் முன்னர் நிகழ்ந்த அழிவுகள் பிள்ளைகளின் கல்வியில் ஏற்படுத்திய பாதிப்பினால் அவர்களின் மீது ஏற்படுத்தியுள்ள வலுவான தாக்கங்களை எடுத்துவிளக்குகின்றன. கடந்த 2 வருடங்களாகக் கல்வியில் விட்டுச்செல்லப்பட்ட மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு கல்விக்கு மீண்டும் கொண்டுவரப்படுவதை

---

[50] 125 புதிய பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகப் பெயரிடப்படவுள்ளன – கல்வி அமைச்சு (newsfirst.lk) (8.3.2020)

[51] இலங்கை: 1000 தேசிய பாடசாலைகள் உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம் நாளை தொடங்குகின்றது (colombopage.com) (6.1.2022)

உறுதிப்படுத்துவதற்கு, குறிப்பாக அவர்களின் சமூக பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் அவர்களைக் கல்வியினுள் மீண்டும் கொண்டுவருவதை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் உடனடியான மற்றும் அவசரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஒரு முன்னுரிமை நடவடிக்கையாக, கல்வி அலுவல்கள் பற்றிய ஜனாதிபதி செயலணி முன்மொழிந்த உபாயமார்க்கங்களை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதுடன், இலங்கையில் பல தசாப்தங்களாக நிலவிவரும் கல்வியிலுள்ள முக்கியமான ஒப்புரவின்மைகளை முதலில் அகற்றாமல் எந்தவொரு பொருளாதார நெருக்கடியும் நீண்ட காலத்தில் வெற்றிகரமாக அகற்றப்படமாட்டாது என்ற அளவுக்கு இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.